விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 06 சனிக்கிழமை (20.06.2009) தொலைபேசி 222 3378,222 7829 ஒலி 183

SATS-TECH ENGINEERS
T20 ICC WORLD TWENTY20 ENGLAND 09
Now available in dishtv & sundirect
New packages & Renewal
Call :-222 5908 / 222 8812

## யாழ்ப்பாண கடற்றொழிலாளர்கள்

# 24 மணிநேரமும் மீன்பிடியில் ஈடுபட நிபந்தனைகளுடன் அனுமதியளிப்பு



## பசில் எம்.பி. அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக் கடற்பகுதியில் 24 மணிநேரமும் மீன்பிடியில் ஈடுபட சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்குவதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், வடக்கின் வசந்தம் செயலணியின் தலைவருமான பசில் ராஜபக்ஷ நேற்று அறிவித்தார். இந்த அறிவிப்பு இன்று முதல் அமுலுக்கு வருகின்றது. (11ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் விரைவில் மீளக் குடியமர்வாம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ள பகுதிகளில் விரைவில் மக்கள் மீள்குடியமர்த்தப்படுவரென ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் வசந்தம் செயலணியின் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

காரைநகர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற மீனவர்களுடனான மாநாட்டிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரால் உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

## 24 மணிநேர மின் விநியோகம் வைபவ ரீதியாக நேற்று ஆரம்பம்

(சுன்னாகம்)

மின்சக்தி வலு அமைச்சர் ஜோன் செனவிரட்ண தலைமையிலான குழுவினர் நேற்று நொதேர்ன் பவர் நிறுவனத்துக்கு சென்று யாழ். குடாநாட்டிக்கான 24 மணி நேர மின் விநியோகத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.

இவ் வைபவத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ, யாழ். அரச அதிபர் க.கணேஷ், இலங்கை மின்சார சபையின் யாழ் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதில் சமூக (12ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் முதல் பளை வரை உள்ளக புகையிரத சேவை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ளக புகையிரத சேவையை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் வசந்தம் செயலணித் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடக்கின் வசந்தம் செயலணிக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் (12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் புதிதாக 40 இராணுவ முகாம்கள்

### அமைக்க அரசு திட்டம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் சுமார் 40 இராணுவ முகாம்கள் அமைக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டெடுக்கப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாத்தல் மற்றும் சட்ட ஒழுங்கை நிலைநாட்டல் போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த இராணுவ (12ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஒருவருக்கு பன்றிக் காய்ச்சல்

(கொழும்பு)

நோவல் இன்புளுவன்சா எனப்படும் பன்றிக் காய்ச்சல் வைரஸ் தொற்றியுள்ளதாக சந்தேகிக்கப்படும் மேலும் ஒரு நோயாளர் ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வைரஸ் (12ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர் பிரச்சினையை தீர்க்காவிட்டால் இலங்கையில் வன்முறைகள் வெடிக்கும்

### ஐ.நா. செயலர் எச்சரிக்கை

(நியூயோர்க்)

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் இலங்கையில் மேலும் வன்முறை வெடிக்கும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் எச்சரித்துள்ளார்.

மனிதாபிமான பிரச்சினைகளுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு நியூயோர்க் நகரில் நேற்று நடைபெற்ற விழாவில் விருது வழங்கப்பட்டது. விருதைப் பெற்றுக் கொண்டு அவர் பேசியதாவது

கடந்த மே மாதம் 22 ஆம் திகதி 2 நாட்கள் பயணமாக நான் இலங்கைக்கு சென்றேன். 2 இலட்சத்து (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்க அனுமதிக்கப் போவதில்லை

### ஐ.தே.க. அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தோற்கடித்திருப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் மக்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தை தேர்தலை நடத்தாமல் மேலும் 6 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கான திட்டத்துடன் அரசாங்கம் செயற்படுவதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளதுடன் அதற்கு அனுமதிக்கப்போவதில்லை எனவும் குறிப்பிட்டிருக்கின்றது.

தம்புள்ளையில் அண்மையில் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனினால் ஏற்பாடு (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியைக் கொல்ல முயன்ற மூன்று பேர் ராஜகிரியவில் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்யத் திட்டமிட்டதாகக் கூறப்பட்டு 3 தமிழர்கள் இலங்கைக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் ராஜகிரிய பிரதேசத்திலும் மற்றவர் வாழைச்சேனை பிரதேசத்தில் வைத்தும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண குற்றத் தடுப்பு பிரிவினரால் ராஜகிரிய பிரதேசத்தில் வைத்து கடந்த 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் இரண்டு தமிழர்களும் (11ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# முகாம்களில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட உதவுங்கள்

## விசேட செயலணிக் கூட்டத்தில் துணைவேந்தர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

இடம் பெயர் முகாம்களிலுள்ள பல்கலைக் கழக மாணவர்களை மீண்டும் கற்றல் செயற் பாடுகளில் இணைந்து கொள்வதற்கான முடிபினை மாணவர்களின் கல்வி, கால விரயம் ஆகியவற்றினைக் கருத்திற் கொண்டு தாமதமின்றி மேற்கொள்ள வேண்டுமென யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் நேற்று முன்தினம் யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நடந்த விசேட செயலணிக் கூட்டத்தில் கேட் டுக்கொண்டார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் வசந்தம் செயலணியின் தலைவரு மான பசில் ராஜபக்ஷவின் தலைமையில் நடந்த விசேட செயலணிக் கூட்டத்தில் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முக லிங்கன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவர்களின் அடிப்படை தேவை களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வுடன் இணைந்து பல்கலைக்கழகம் மேற் கொள்கின்றது.

இன்னும் பெற்றோருடன் தொடர்பினை இழந்து தற்போது பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான தேவை களை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு, பல்கலைக்கழக பழைய மாணவர்கள் உதவியுடனான துணைவேந்தர் மாணவர் நல நிதியம் ஊடாக கவனித்து வரு வதாகவும் இனி வரும் காலத்தில் இதனை தொடர்வதற்கு மேலும் நிதி தேவைப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் மிகுந்த துயரங்களை கண்டு விட்டார்கள். வருகின்ற வசந்தத்தை வரவேற்க அவர்கள் மீண்டும் தங்கள் ஊர்களுக்கு- சொந்த வீடுகளுக்கு மீள வேண்டும். சாத்திய மான இடங்களிலிருந்து கடினமான இலக்கு களை நோக்கி இதற்கான வழிவகைகளை விரைந்து மேற்கொள்வது அவசியம்.

வகுக்கப்படும் திட்டங்கள் சமூக, அரசியல், பொருளாதார பண்பாட்டு புலங்கள் அனைத் தையும் ஒருங்கிணைத்த முழுதளவாகிய திட் டங்களாக வேண்டும். நடைமுறைப் படுத்த லில் உள்ள கால தாமதங்களை களைவதற் கான சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதும் அவசியமாகும்.

மீண்டும் எங்களது விவசாயிகள் தங்கள் வளமான செம்மண் விவசாயப் புலங்களுக்கு செல்லவும், மீனவர்கள் தம் வாழ்வுக்கான ஆதாரங்களை கண்டு கொள்ள வழி காண வேண்டும். ஆடி அமாவாசைக்கு எங்கள் மூதா தையர்களுக்கான கடன்களை நிறைவேற்ற சுதந்திரமாக கீரிமலைக்கு செல்லும் ஏற்பாடு எட்டப்பட வேண்டும்.

80களின் பிற்கூறில் தன் தாய்க் கிரா மத்தை விட்டு இடம்பெயர்ந்த வேளை தாம் பாடிய கவிதையின் வரிகளை மீட்ட பேராசிரியர், அந்த கவிதையில் குறித்தவாறு வசந்தத்தை வரவேற்கும் எங்களூர் வசந்தன் கூத்தை சொல்லி வசந்தத்தின் அர்த்தம் நிலை பெற வேண்டும் என்றார்.

துணைவேந்தரின் உரையைக் கவன மாக செவிமடுத்த வட மாகாண செயலணி தலைவர் பசில் ராஜபக்ஷ, துணைவேந்தரின் ஆதங்கங்களை கூடிய விரைவில் நிறைவேற் றும் நோக்கிலேயே தமது செயற்றிட்டங்கள் அமைகின்றன என்றும் அனைத்து தளங்களி லும் அனைவரும் ஒன்றிணைந்து இதனை நிறைவேற்ற முடியும் என்றும் குறிப்பிட்டார். (ந)

## அலங்கார உற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு திருவருள் மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிய ளவில் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

பத்தாம் நாள் 29 ஆம் திகதி திங்கட் கிழமை ஆனி உத்தர தினத்தன்று காலை 8 மணிக்கு (1008)சகஸ்ர சங்காபிஷேகமும் மாலை 3.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து பஞ்சமுக அர்ச்ச னையும் திருவூஞ்சலும் இடம்பெற்று சுவாமி கேடத்தில் கிராம ஊர்வலம் வரும் காட்சியும் இடம் பெறும். தினமும் காலை உற்சவம் காலை 10 மணிக்கும் மாலை நேர உற்சவம் 5.30 மணிக்கும் நடைபெறும். (ச-14)

## நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கு புதிய படகு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக் கென புதிய படகொன்று பெற்றுக் கொடுக்கப் படுமென ஜனாதிபதியின் ஆலோசகரும் வடக்கின் வசந்தம் செயலணியின் தலைவ ருமான பசில் ராஜபக்ஷ உறுதியளித்துள் ளார்.

காரைநகரில் நேற்று நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டின் போது இவ் உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு படகு ஒன் றினை பெற்றுத் தருமாறு கோரப்பட்ட போது நவீன வசதிகளுடன் கூடிய படகொன்றினை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என பசில் எம்.பி உறுதியளித்துள்ளார். (ச)

## தர்கா நகருக்கு அழைக்கப்பட்டோர்

தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூ ரிக்கு காத்திருப்போர் பட்டியலில் இருந்து ஆரம்பக் கல்விக்கு பின்வரும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**ஆரம்பக் கல்வி**

ரி.பிரின்சியா (சர்வோதய வீதி அச்சுவேலி தெற்கு), எஸ்.மாலதி (பொலிகண்டி மேற்கு வல் வெட்டித்துறை), எஸ். பிறேமலதா (பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு), எஸ். நவரத்தினம் (மானிப்பாய்), கே.சுதர்சினி (டச்சுவீதி, சண்டி லிப்பாய்), ஆர்.கோபினி (இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம்)

**மனைப் பொருளியல்**

எஸ். கஜேந்தினி(அராலி வடக்கு) (ச)

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு காத்திருப்போர் பட்டியலில் தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூ ரிக்கு காத்திருப்போர் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விபரம் வெளி யானது. இவர்கள் தமது படிவங்களை 22 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரிக்கு வந்து பெற்றுக் கொள்ளலாம் என பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தெரி வித்துள்ளார். அழைக்கப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

**ஆரம்பக் கல்வி**

கே. கவாஸ்கர் (குப்பிளான் வடக்கு)

**ஆங்கிலம்**

ஏ.ஆசனி (குளப்பிட்டி), ரி.துரேன்ரா (சங்கானை மேற்கு), எம்.என்.மெனேசியா மேலனி (2ஆம்குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்), கே. கிருஷ்ணசாந்தினி (மாட்டின் வீதி யாழ்), ரி. பிரியா (மீசாலை மேற்கு), ஏ. சர்மினி (இராசா வின் தோட்டம்), ஏ. எஸ். தயாளினி (சில்லாலை), எஸ். ரம்யா (நீர்வேலி வடக்கு), என். உஷா (காரைநகர்),

கே. லக்ஷனா (கரணவாய் வடமேற்கு), எஸ்.சியாமளி (துன்னாலை தெற்கு), ரி . கிரு பாலினி (கரவெட்டி கிழக்கு), எஸ்.பாரதி (புலோலி மத்தி, யூ. மதுஜா (நல்லூர்), ரி.நிதர்யா (வல்வெட் டித்துறை), ஜே. ஜெயசுதன் (சங்கானை), ஏ.கேமலக்சுமி (வல்வெட்டித்துறை), ரி.வினோ தயானி (துன்னாலை மத்தி), எஸ். ஆனந்தினி (கோப்பாய்), எம். பஸ்லசாயினி (அரியாலை), எம்.சந்துரு (உரும்பிராய் மேற்கு),

**நாடகமும் அரங்கியலும்**

பி.பிரசாந்தி (சுன்னாகம்), கே. பிரதீபா (மீசாலை)

**விசேட கல்வி**

ரி. சரண்ராஜ் (கம்பர்மலை), ரி. நடராஜா (அல்வாய்), எஸ்.சிவானந்தினி (கரணவாய கிழக்கு),

**விஞ்ஞானம் (ஆங்கிலம்)**

எஸ். பிரார்த்தனா (வல்வெட்டித்துறை)

**விஞ்ஞானம் (தமிழ்)**

ஆர்.சுகன்யா (யாழ்ப்பாணம்), எஸ்.செல்வ ராசா (அளவெட்டி தெற்கு), என். சங்கீதா (புலோலி),

**கணிதம் (ஆங்கிலம்)**

வை. பிரியசாளினி (சண்டிலிப்பாய்)

## சா.த. பரீட்சை பழைய பாடத்திட்டம் இவ் வருடமே இறுதியாக நடத்தப்படும்

### பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பழைய பாடத்திட்ட பரீட்சை இவ் வருடமே இறுதியாக நடத்தப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித் துள்ளது.

இப் பரீட்சைக்கான விண்ணப்பங் களை ஏற்கும் இறுதித் தினம் யூலை 15 ஆம் திகதியாகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பங்களை பதிவுத் தபாலில் பரீட்சை ஆணையாளர் நாயகம், பாட சாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைத்திணைக் களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(மேலதிக விபரங்களை வலம் புரி அலுவலகத்தில் பார்வை யிட லாம்.) (ச-5)

## கோதுமை மா- 72 ரூபா, சீனி 87 ரூபா கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கோதுமை மா, சீனி ஆகியன மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ. சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின் றது. ஒரு கிலோ கோதுமை மாவின் ப.நோ.கூ. சங்கங்களின் விற்பனை விலை 72 ரூபா ஆகவும் ஒரு கிலோ சீனியின் ப.நோ.கூ. சங்கங்களின் விற்பனை விலை 87 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள் ளது.

மேற்படி பொருட்களுக்கான வழங் கற் கட்டளைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாத ப.நோ.கூ. சங்கங்கள் இன்று மாவட்ட புனர்வாழ்வு புனர மைப்பு செயலகத்தில் பெற்றுபொருட் களை அரச உணவுக் களஞ்சியத் தில் பெற்று பொது மக்களுக்கு தட்டுப்பாடு அற்றநிலையில் விநியோ கிக்குமாறும் அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். இப்பொருட்களுக் கான மொத்த விற்பனை மேற் கொள்ள அனுமதிக்கப்பட வில்லை எனவும் மேற்படி விநியோக நடவடிக் கைகளை கூட்டுறவு அபிவி ருத்தி உதவி ஆணையாளரை மேற் பார்வை செய்யுமாறும் அரசாங்க அதிபர் அறியத் தந்துள்ளார். (ச)


உ
சிவமயம்



யாழ் கோண்டாவில் வடக்கு
அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத
ஸ்ரீ சிவபூதவராய சுவாமி தேவஸ்தானம்
வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

சிவனடியார்களே !

அன்பே தெய்வம், அருளே வடிவம், அன்பும் அருளும் சேர்ந்தது தான் தெய்வ வடிவம். இத் தெய்வ வடிவமானது திருமூலரால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகரின் கோண்டாவில் வடக்கிலுள்ள அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவபூதவராயர் எழுந்தருளி அகிலமெங்கும் ஆன்மாக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் எம் பெருமானின் அருட்சக்தியை சொல்லிலோ எழுத்திலோ கூறிவிடமுடியாது.

திருவாக்கும், செய்கருமமும் கைகூட வேண்டுவார்க்கு வேண்டும் வரம் அனைத்தையும் வாரிவழங்கும் கோண்டாவில் பதியுறை அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவபூதவராயருக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஆனி மாதம் இருபதாம் திகதி (விரோதி வருடம் ஆனி 6ஆம் நாள்) சனிக்கிழமை வருடாந்த மஹோற்சவ வைபவம்(கொடியேற்றம்) ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறத் திருவருள் பாலித்திருப்பதனால் அடியார்கள் யாவரும் ஆசாரசீலர்களாக விரத நியமங்களுடன் ஆலயத்துக்கு வந்து எம் பெருமானை வணங்கி வேண்டிய வரங்களைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

✱ கொடியேற்றத் திருவிழா இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும்.

விளம்பர அனுசரணை:
அனைத்து பொருட்களும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளும் ஒரே ஸ்தாபனம்
நாதன் பல்பொருள் வாணிபம்
கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் (2856)

# இன்று ஒரு தகவல்

## பதவியும் பண்பும்

என்னுடன் படித்த நண்பர் ஒருவர் மிகவும் கவலையுடன் உட்காந்திருந்தார்.

"என்ன விடயம்?" என்று விசாரித்தேன்.

அதற்கு அவர் சொன்னார்.

"சின்ன வயதில் நம்முடன் படித்த ஒருவன் இப்பொழுது ஒரு பெரிய உத்தியோகத்தில் இருக்கிறான். சும்மா அவனைப் பார்த்து வாழ்த்து சொல்லிவிட்டு வரலாம் என்று போனேன்.

அவன் சரியாக முகம் கொடுத்துக்கூட பேசவில்லை. ஏதோ ஒரு அற்பப் புழுவைப் பார்ப்பது போல் என்னைப் பார்த்தான். நான் போட்டிருக்கும் இந்த சாதாரண சட்டை கூட அவனுடைய கௌரவத்துக்கு இடைஞ்சல் என்பது போல் என்னிடம் பழகினான். அதுதான் மனம் ஒரு மாதிரியாகிவிட்டது. உன்னிடம் வந்தேன்" என்றார்.

"கவலைப்படாதே இன்றைக்குப் பலபேர் இப்படித்தான் இருக்கிறார்கள். பதவி பெருகப் பெருக பண்பு குறைந்து விடுகிறது. இடம் உயர உயர இதயம் குறுகிப் போய் விடுகிறது. இதயம் விசாலமானவர்களை இதிகாசங்களில் தான் பார்க்க முடிகிறது" என்றேன்.

"என்ன அப்படிச் சொல்கிறாய்?" என்றார்.

"ஆமாம்" என்று சொல்லி குசேலர் கண்ணனைப் பார்க்கப் போன கதையைச் சொன்னேன்.

குசேலர் கிருஷ்ணனைச் சந்திப்பதற்காக போகிறார். போகும்போது அவல் கொண்டு போகிறார். ஒரு பழைய துணி மூட்டையில் அதைக் கட்டி எடுத்துக் கொண்டு போகிறார்.

கிருஷ்ணன் அந்த மூட்டையை வாங்கிப் பிரிக்கிறார். குசேலர் அதைப் பார்க்கிறார். அவரது மனம் சங்கடப்படுகிறது.

"நான் எங்கே? கிருஷ்ணன் எங்கே? நான் ஏழை. வறியவன். கிருஷ்ணனோ பேரரசன். இறைவன். என்னுடைய அழுக்கான துணியை அவர் கையால் தொடலாமா?" என்று நினைக்கிறார்.

ஆனால் கிருஷ்ணன் அந்த மூட்டையிலிருந்த அவலை எடுத்து சாப்பிட ஆரம்பித்தார்.

மூன்றாவது பிடி அவலை வாயில் போட்டுக் கொள்ளப் போனார். அந்த சமயம் ருக்மணி ஓடிவந்து கிருஷ்ணனின் கையைப் பிடித்தார்.

குசேலருக்கு மிகவும் ஆச்சரியமாகிவிட்டது. நாம் கொண்டு வந்த இந்த அவலைக் கிருஷ்ணன் சாப்பிடுவது ருக்மணிக்கு பிடிக்கவில்லை போலிருக்கிறது என்று நினைத்தார்.

ஆனால் கிருஷ்ணனுக்கு ருக்மணியின் இதயம் புரிந்தது. ருக்மணிக்கும் கிருஷ்ணனின் இதயம் புரிந்தது. எனினும் குசேலர் ருக்மணியைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பேச ஆரம்பித்தார். அவர் ருக்மணியைப் பார்த்து, "எதற்காக நீ என் கையைத் தடுத்து நிறுத்தினாய்? நான் குசேலனின் சேவகன். அவர் கொண்டு வந்த அவலை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

இதற்கு ருக்மணி, "கிருஷ்ணா! நீ குசேலருக்குத் தொண்டன். நான் உனக்குத் தொண்டு செய்பவள். அந்த உரிமை காரணமாக எனக்கு இந்த அவலில் பங்கு வேண்டாமா? எனக்குள்ள பங்கைத்தான் கேட்கிறேன்" என்றார் ருக்மணி.

ஆன்மீக எண்ணங்களெல்லாம் எந்த அளவுக்கு விசாலத்தன்மை வாய்ந்தவை என்பதை நாம் புரிந்து கொள்வதற்காகத்தான் சான்றோர்கள் இந்தச் சம்பவத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பதவி உயரும் போது பண்பு உயர வேண்டும். பழைய நட்புகளை மறந்துவிடக்கூடாது.

இந்தக் காலத்தில் சாதாரண உயர்வையே மிகவும் பெருமையாக நினைப்பவர்களும் உண்டு.

"நான் கடந்த ஒரு மாத காலத்தில் வாழ்க்கையில் மிகவும் உயர்ந்திருக்கிறேன்" என்றார் ஒருவர்.

"அதெப்படி?" என்றேன்.

"போன மாதம் காலில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் சேர்ந்தேன். அப்பொழுது 3 ஆவது மாடியில் படுத்திருந்தேன். இப்பொழுது 7 ஆவது மாடிக்கு மாற்றியிருக்கிறார்கள்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற பிரதேச செயலகங்கள் மற்றும் கடிதங்களுடன் சிறந்த வீர, வீராங்கனைகளின் பெயர் விபரம் வருமாறு,

**கபடி - ஆண்**

பருத்தித்துறை பிரதேச செயலகம், தெல்லிப்பளை பிரதேச செயலகம், **சிறந்த வீரன்** - செல்வரட்ணம் சோதிராஜா (பருத்தித்துறை பி.செ)

**கபடி - பெண்**

நல்லூர் பிரதேச செயலகம், தெல்லிப்பளை பிரதேச செயலகம், **சிறந்த வீராங்கனை** - கஜதீபா திருநாவுற்கரசு (நல்லூர் பி.செ).

**உதைப்பந்தாட்டம் - ஆண்**

கரவெட்டி பிரதேச செயலகம், யாழ்ப்பாண பிரதேச செயலகம், **சிறந்த வீரன்** - மதனராசா பிறேம் குமார் (கரவெட்டி பி.செ)

**உதைப்பந்தாட்டம் - பெண்**

பருத்தித்துறை பி.செயலகம், சண்டிலிப்பாய் பி.செயலகம், **சிறந்த வீராங்கனை** -தங்க வடிவேல் பார்த்தீபா (பருத்தித்துறை பி. செ).

**வலைப்பந்தாட்டம்**

தெல்லிப்பளை பிரதேச செயலகம், நல்லூர் பிரதேச செயலகம், **சிறந்த வீராங்கனை** - அர்ச்சனா சச்சிதானந் (தெல்லிப்பளை பி.செ.)

**கிரிக்கெட் - ஆண்**

நல்லூர் பிரதேச செயலகம், தெல்லிப்பளை பிரதேச செயலகம், **சிறந்த வீரன்** - சிவசுப்பிரமணியம் கைலேஸ்வரன் (நல்லூர் பி.செ.)

**கிரிக்கெட் - பெண்**

பருத்தித்துறை பிரதேச செயலகம், சங்கானை பிரதேச செயலகம், **சிறந்த வீராங்கனை** - குகசாந்தி வின்செற் சேச்சில் (பருத்தித்துறை பி.செ)

**எல்லே - ஆண்**

தெல்லிப்பளை பி. செயலகம், பருத்தித்துறை பி. செயலகம், **சிறந்த வீரன்** - குணசிங்கம் கனிஸ்ரன் (தெல்லிப்பளை பி.செ)

**எல்லே - பெண்**

மருதங்கேணி பி. செயலகம், பருத்தித்துறை பி. செயலகம்.

**கரப்பந்தாட்டம் - ஆண்**

கோப்பாய் பி. செயலகம், தெல்லிப்பளை பி. செயலகம், **சிறந்த வீரன்** - சிவசம்பு சிவசொறூபன் (கோப்பாய் பி.செ)

**கரப்பந்தாட்டம் - பெண்**

தெல்லிப்பளை பி. செயலகம், கோப்பாய் பி. செயல்கம், **சிறந்த வீராங்கனை** - மீரஜா பரதீஸ்சன் (தெல்லிப்பளை பி.செ)

**விருப்பத்திற்குரிய பெரு விளையாட்டுக்கள்**

**பட்மின்ரன் - ஆண்**

மான்ஸ் வி.கழகம், ஐக்கிய வி.க. அரியாலை, **சிறந்த வீரன்** - லொறின் றெமிஜியஸ் றெமின்ரன் (மான்ஸ் வி.க)

**பட்மின்ரன் - பெண்**

மான்ஸ் வி.க. உடுவில், சுண்டுக்குளி வி.கழகம், **சிறந்த வீராங்கனை** - சந்திரராசா மென்சிலா (உடுவில் வி.க).

**ஹொக்கி - ஆண்**

ஓல்ட் கோல்ட் வி.க, பல்கலைக் கழக வி.க., **சிறந்த வீரன்** - ரஜீவ் காந் கணேஷ் (ஓல்ட் கோல்ட் வி.க. சங்கானை)

**ஹொக்கி - பெண்**

உடுவில் மகளிர் வி.க, யாழ். ஸ்ரார் வி.க, **சிறந்த வீராங்கனை** - ஜெயாலினி செல்வராசா (உடுவில் மான்ஸ். வி.க)

**கூடைப்பந்தாட்டம் - ஆண்**

சென்றலைட்ஸ் வி.க, ஜொலிஸ்ரான் வி.க.

**கூடைப்பந்தாட்டம் - பெண்**

பமிலியன்ஸ் வி.க, திருக்குடும்ப வி.க, **சிறந்த வீராங்கனை** - சனுஜா ரவி (யாழ். பிரதேச செயலகம்) (ஓ-6)

# வடமராட்சி வலய மட்ட சதுரங்கப் போட்டி முடிவுகள்

வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடமராட்சி வலய மட்ட சதுரங்கப் போட்டியின் முடிபுகளை உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வே. வல்லிபுரம் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**8 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

கு. வித்யாசாகர் (மேலைப் புலோலி சை.பி. வித்தியாலயம்), இ. தனுசன் (தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), சு. சுமன் (உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை)

**9 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

வ. உமைபாலன் (புற்றளை மகா வித்தியாலயம், க. நர்த்தனன் (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், மூன்றாமிடம் இருவர் - வ. கஜேந்திரன் (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), கி. நிரோஜன் (வல்வை மகளிர் வித்தியாலயம்)

**10 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

பீ. ஜோய்சன் (ஹாட்லிக் கல்லூரி), யோ. ரக்ஷன் (மாணிக்கவாசகர் வித்தியாலயம்), ஜெ. சிந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி)

**11 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

தே. அஜித்ராஜ், சு. விதுர்ஜன், கி. லலிதகாந்தன் (ஹாட்லிக் கல்லூரி)

**12 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

ர. திருபரன் (ஹாட்லிக் கல்லூரி), வ. மதன்ராஜ் (தும்பனை சிவப்பிரகாச வித்தியாலயம்), கி. அபிநயன் (நெல்லியடி ம. ம.வித்தியாலயம்)

**8 வயதுப் பிரிவு (பெண்கள்)**

உ. சசிதரா, செ. ஆர்த்திகா (வல்வை மகளிர் வித்தியாலயம்), சோ. ஜெய்கௌரி (உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாசாலை)

**9 வயதுப் பிரிவு (பெண்கள்)**

சி. உமையாள், சு. சுமித்தா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), யோ. சாம்பவி (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை)

**10 வயதுப் பிரிவு பெண்கள்**

கு. துஷியந்தி (மெதடிஸ்த பெ. உ.த. பாடசாலை), வ. மாதுளம் (வட இந்து மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் இருவர் - ற. தமிழினி (வல்வை மகளிர் வித்தியாலயம்), ம. தயானி (நெல்லியடி மெ.மி.த. க. பாடசாலை)

**11 வயதுப் பிரிவு (பெண்கள்)**

வி. நீர்த்திகா (வட இந்து மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் இருவர் கு.மாதுளம்(மெதடிஸ்த பெ. உ.த. பாடசாலை), த. அபிஷேகா (நெல்லியடி ம.ம. வித்தியாலயம்), எஸ். தரணியா (மெதடிஸ்த பெ.உ.த. பாடசாலை)

**12 வயதுப் பிரிவு (பெண்கள்)**

சூ. புவித்தா (மெதடிஸ்த பெ. உ. த. பாடசாலை), சு. கம்சாயினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ம. கௌதமி (வட இந்து மகளிர் கல்லூரி) (ஓ-6-19)

# இராசி பலன்

20.06.2009
(ஆனி 6, சனிக்கிழமை)
துவாதசி முற்பகல் 8.27 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 3.45 மணிவரை
இராகுகாலம் 8.54-10.24 மணிவரை
சுபநேரம் 2.54-4.24 மணிவரை
கார்த்திகை விரதம், சனிப்பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | கடின முயற்சி, அமைதிக் குறைவு, தனவிரயம், விவாதம். |
| இடபம் | பெரியோரால் மதிக்கப்படுதல், சிந்தனை மிகுதி, சயன சுகம், நல்ல முயற்சி. |
| மிதுனம் | உணர்ச்சி வசப்படுதல், வேலைச் சுமை, முயற்சி தாமதம், உஷ்ண நிலை. |
| கடகம் | முயற்சி கைகூடும், உறவினர் சந்திப்பு, பொருள் சேர்க்கை, தேகநலன். |
| சிங்கம் | சுபநிகழ்வு, உற்சாகம், காரிய சித்தி, பெரியோர் உதவி. |
| கன்னி | நிலைமாற்றம், அச்சமான நிலை, முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு. |
| துலாம் | வீண்தொல்லை, முயற்சி தாமதம், வாகன பயம், போசன நன்மை |
| விருச்சிகம் | அபூர்வ சந்திப்பு, திடீர் பயணம், பணவரவு, காரிய அனுகூலம். |
| தனுசு | சுகவாழ்வு, எடுத்த காரியம் கைகூடும், சத்துரு ஜெயம், போசன சுகம். |
| மகரம் | மனச் சஞ்சலம், தொழில் சிந்தை, பணக்குறைவு, காரிய இடையூறு. |
| கும்பம் | விரும்பாத உறவு, பயந்த சுபாவம், நல்ல முயற்சி, போசன சுகம். |
| மீனம் | இனிய சம்பவம், வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு, தொழில் நன்மை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 65 | 50 |
| உருளைக்கிழங்கு | 140 | 160 | 150 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 70 |
| தக்காளி | -- | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 80 |
| கோவா | -- | 150 | -- |
| கரட் | 80 | 120 | 80 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 30 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 65 | 70 |
| சின்ன வெங்காயம் | 50 | 50 | 50-60 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 65 | 75 | 60 |
| வெண்டிக்காய் | 30 | 50 | 80 |
| கரணைக் கிழங்கு | 60 | 60 | -- |
| பயிற்றங்காய் | 70 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 300 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 10 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி முன்றலில் கணேச சனசமூக நிலையத் தலைவர் சு.செல்லப்பா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு பிரதேச செயலக முன்பிள்ளை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் மயில்வாகனம் ரவிபாலா கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராம அலுவலர் வே.சம்பந்தநாதன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.தனேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-6)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பாடசாலையின் உள்ளக மைதானத்தில் அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நிக்கொட் நிறுவனத்தின் உதவிச் செயற்திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர்.சிவரூபன் கலந்துகொள்ளவுள்ளார். பரிசில்களை யாழ். பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர் திருமதி அபிராமி சிவரூபன் வழங்கிக் கௌரவிப்பார். (ஓ-6)

## கவிதைத் தொகுப்பு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பாகிய "கிறுக்கி" கவிதைத் தொகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலய வெளி மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்நூல் அருட்தந்தை அமிர்தநாதர் இயூஜின் அமல்ராஜின் குருப்பட்ட முதல் திருப்பலியன்று அவருக்கு சமர்ப்பணமாக வெளியீடு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக் கூட்டமும்

(கைதடி)

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்க 42 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் பழைய மாணவர் சங்க தலைவர் வி.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின்போது பழைய மாணவர் சங்கத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலை நுளைவாயிலின் பெயர்ப்பலகை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன்போது விளையாட்டுப்போட்டி, பரிசு வழங்கல். கலை நிகழ்ச்சிகள், மதியபோசன நிகழ்வு என்பனவும் நடைபெறவுள்ளன. (ஓ-14)

# ஆனித் திருமஞ்சன மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்



வட்டுக்கோட்டை – தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆனித் திருமஞ்சன மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 24 ஆம் திகதி புதன்கிழமை 11.30 மணிக்கு பக்தி முக்தி பாவனோற்சவமும் மாலை சப்பறக் காட்சியும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5.30 மணிக்கு துவஜாரோகணமும் இடம்பெறவுள்ளது. (ஓ-6)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் தங்குவதற்கான இடவசதிகள் பற்றாக்குறை

(கோப்பாய்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இவ்வாண்டுக்கான பயிற்சி ஆசிரிய மாணவர்களை அனுமதித்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் புத்தளம், மன்னார் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளதோடு முஸ்லிம் மாணவர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவர்களைத் தங்க வைப்பதற்கான இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் நெருக்கடியை எதிர்நோக்குவதாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் மலர் சின்னையா தெரிவித்துள்ளார்.

கலாசாலையின் ஒரு பகுதியில் இடம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் அம் மக்களை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு அல்லது ஆசிரிய மாணவர்கள் தங்குவதற்கு கலாசாலையின் அருகிலுள்ள பிரதேசத்தில் இடவசதி ஏற்படுத்தித் தருவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் கேட்டுள்ளார். (ஓ-14-134)

# வன்னியில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் உதவிகள்

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து முகாம்களில் தங்கியுள்ள நோயாளர்களின் நன்மை கருதி ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் ரூபா நிதியினை உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் கழகம் வழங்கியுள்ளது.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் தலைமையில் கல்லூரி ஆசிரியர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சமுகமளித்து இடம்பெயர்ந்த நோயாளருக்கு இந் நிதி மூலம் பெற்ற பொருட்களை வழங்கினர். ஆசிரியர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலை நிகழ்வு மூலம் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களிடம் இருந்து பெறப்பட்ட நிதி மூலம் குழந்தைகள், நோயாளர்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கியுள்ளார்கள்.

முதற்கட்டமாக இத் தொகை வழங்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் கட்டமாக மேலும் ஒரு தொகுதியினருக்கு உதவி செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-27)

# கரவெட்டிப் பகுதியிலுள்ள ஆயிரம் வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை

## கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தெரிவிப்பு

(வடமராட்சி)

வடமராட்சியில் கரவெட்டிப் பகுதியில் ஆயிரம் வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தெவித்தார். இத் திட்டத்திற்கு 250 விண்ணப்பங்கள் இதுவரை கிடைத்திருப்பதாகவும். இவ் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மாயக்கைப் பகுதியில் இருந்து கரவெட்டிப் பகுதிக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர் நிக்கொட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இத் திட்டத்தை செயற்படுத்தி வருவதாகவும் இதற்கென பெரிய அளவில் பாரிய தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை மாயக்கைப் பகுதியில் இருந்து கரவெட்டிக்கு நிலத்தடி ஊடாகக் குழாய் மூலம் குடி தண்ணீரை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென கொழும்பிலிருந்து தேவையான பைப் வகைகள் நீர் இறைக்கும் இயந்திரம் என்பனவும் வந்து சேர்த்துள்ளதாகவும் இப்பாரிய வேலைத் திட்டத்திற்கு 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-10)



சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான முகவர் அமைப்பு திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து நடாத்திய "சிறார் கலைக் கதம்பம்" நிகழ்வில் இமையாணன் சிறுவர் கலைக்கூட மாணவர்கள் சிந்து நடனக் கூத்தினைப் பாடுவதைப் படத்தில் காணலாம்.

## மஹா கும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலை விநாயகர் தேவஸ்தான சம்ப்ரோட்சண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் பெருவிழா 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.32-11.32 மணிவரை உள்ள சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இதனைத்தொடர்ந்து விசேட பூசைகள் நடைபெற்று விநாயகப்பெருமான் திரு வீதி உலா வருதல் இடம்பெறும். (ஓ-35)

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

பொலிகண்டி கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் யூலை மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை தேர் உற்சவமும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (ஓ-35)

✠✠✠

அராலி- வண்ணபுரம் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள நடைபெறும் இம் மஹோற்சவத்தில், எதர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் அன்று மாலை 3 மணி முதல் ஆனி உத்தர நடராஜர் அபிஷேகமும் நடைபெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை உதயத்தி[illegible] முன் நடராஜர் உத்தர தரிசனமும் காலை [illegible] மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 3 மணிக்கு கொடியிறக்க வைபவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-49)

✠✠✠

(மருதங்கேணி)

தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் யூலை 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் 7 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 7 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (ஓ-35)




## யாழ்.செய்திகள்

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும், ''ஞானச்சுடர்'' ஆனிமாத ஆன்மீக சஞ்சிகை எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10.30 மணியளவில் வெளியிடப்படும்.

இதன் வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ.கு. தியாகராசசர்மாவும் மதிப்பீட்டுரையை ஆசிரியர் க.நவரத்தினமும் வழங்கவுள்ளனர். (ஓ-35)

## அலங்கார உற்சவம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கிழக்கு ஸ்ரீ ஆதி வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 12.00 மணிக்கு சாந்தியுடன் ஆரம்பமாகி யூலை மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை பத்தாவது நாள் 108 சங்காபிஷேகத்துடன் முடிபுபெறவுள்ளது.

அன்றைய தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட நீர்த்தாங்கியில் இருந்து அடியார்களுக்கும் குடி தண்ணீர் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-72)

# புத்தாண்டில் உங்கள்

## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம் வரை**

அடுத்தவர்களின் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும் தனுசு ராசி நேயர்களே!

ஆனி மாதக் கிரக நிலைதனைப் பார்க்கும் போது ராசிநாதன் குரு வலிமையிழந்தும், வக்ரமடைந்தும் மாதம் தொடங்குவதால் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித் தும் செய்வ தே நல்லது. மாற்றுக் கருத்து டையோர் மனம் மாறும் விதத்தில் நீங்கள் அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயங் கள் உங்களுக்கு வந்து சேரும். இருப்பினும் பஞ்சமாதிபதி செவ்வாய் பலம் பெறுவதால் எதற்கும் பயப்படத் தேவையில்லை. குழப்பங்களும், தடுமாற்றங்களும் வரும் பொழுதெல்லாம் குல தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

தனாதிபதி சனி வக்ர நிவர்த்தியாகி விட்டதால் வருமானம் எதிர்பார்த்தபடி வந்து கொண்டேயிருக்கும். வசதி, வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முன்வருவீர்கள். அஷ்டமத்தில் கேதுவும், இரண்டில் ராகுவும் சஞ்சரிப்பதால் ஏற்ற, இறக்கமான வாழ்க்கையே உங்களுக்கு இயல்பான வாழ்க்கையாக இருந்து விடும். ஒரு காலத்தில் 'ஓகோ' என்றிருப்பீர்கள். மற்றொரு காலத்தில் இப்படியிருக்கிறோமே என்று கவலைப்படுவீர்கள்.

எனவே யோகங்களை நாளும் சந்தித்து வேகத்தோடு பணியாற்றவும் தேகநலன் சீராக இருக்கவும் சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்து கொள்வது நல்லது. யோக பலம் பெற்ற நாளில் அனுகூல ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்துப் பரிகாரம் செய்து கொள்வது நல்லது.

ஜூன் 24ஆம் திகதி மிதுனராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். சப்தமாதிபதி ஒன்பதுக்கு அதிபதியுடன் கூடும் இந்த நேரத்தில் பெற்றோர் வழியில் ஆதாயம் கிடைக்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். குழந்தைகளின் கல்வி நலன் கருதியும், கடல் தாண்டும் முயற்சி கருதியும் ஒரு தொகையை செலவிட்டு மகிழ்வீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். விலகிச்சென்ற வரன்கள் மீண்டும் வந்து சேரலாம். தொழில் சம்பந்தமாக முக்கிய புள்ளிகளை சந்தித்து முடிவெடுப்பீர்கள். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரும். ராகு பலத்தால் பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

ஜூன் 29 ஆம்திகதி 6-க்கு அதிபதி சுக்ரன் 6இல் சஞ்சரிக்கப் போகிறார். எனவே உத்தியோகத்தில் உயர்வும் மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். வாங்கல், கொடுக்கல்களை ஒழுங்கு செய்துகொள்வீர்கள். ஆடை, ஆபரணசேர்க்கை அதிகரிக்கும். வீட்டுக்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். ஊர்மாற் றம், இடமாற்றங்களை ஒரு சிலர் சந்திக்க நேரிடலாம்.

ஜூலை 2ஆம் திகதி ரிஷப்பத்தில் செவ்வாயும் ஜூலை 10 ஆம்திகதி கடகத்தில் புதனும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளை வாக சொத்து விற்பனையால் தன லாபம் கிடைக்கும். சுகங்களும், சந்தோஷங் களும் வந்து சேரும். மற்றவர்கள் போற்றும் அளவிற்கு வாழ்க்கைத் தேவைகளை உயர்த்திக் கொள்வீர்கள். பூதனின் பலத்தால் வங்கிச் சேமிப்பு உயரும். வாகனம் வாங்கும் யோகம் கிட்டும். தங்கம், வெள்ளி தங்கவில்லையே என்ற கவலை மாறும். தாமதப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும்.

## மகரம்

**உத்தராடம் 2,3,4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம் வரை**

நம்பியவர்களுக்கு கைகொடுத்து உதவும் நல்ல உள்ளம் படைத்த மகர ராசி நேயர்களே!

ஆனிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்மத்தில் ராகுவும், 7இல் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். சகாய ஸ்தானாதிபதி குரு வக்ரம் பெற்று சப்தமாதிபதி சந்திரனுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். அஷ்டமாதிபதி சூரியன் 6 இல் சஞ்சரிக்கிறார்.

# ஆனி மாதப் பலன்கள்

எல்லாவற்றுக்கும் மேலாக அஷ்டமத்தில் சனி சஞ்சரிப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

மற்ற கிரகங்கள் சாதகமாக இருந்தாலும் மந்தன் சாதகமாக இருந்தால் தான் மகர ராசிக்கு பொருத்தமான பலன்கள் வந்து சேரும். அந்த அடிப்படையில் சனி விலகும் வரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. கூட இருப்பவர்களை அனுசரித்துச் சென்றால் தான் குடும்பத்திலும் மகிழ்ச்சி கூடும். குழப்பங்கள் தீரும்.

தொழில் சம்பந்தமாக வரும் ஒப்பந்தங்களை கையெழுத்திடும் முன் யோசிப்பது நல்லது. எதிரிகளின் பலம் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்க காலத்தில் கூடும். எனவே, சனீஸ்வர வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. வஸ்திர தானம், அன்ன தானம், சொர்ணதானம் போன்றவற்றைச் செய்வதன் மூலம் வளமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வழிபிறக்கும்.

வேலைப்பளு கூடும். இம் மாதத்தில் எதையும் வேகமாகச் செய்யாமல் நிதான மாகச் செய்தால் தான் வெற்றியடைய முடியும்.

"மறைந்த புதன் நிறைந்த தன லாபத்தைத் தரும்" என்பது பழமொழி. அந்த அடிப்படையில் அஷ்டாமாதிபதி சூரியனுடன் 6க்கு அதிபதி புதன் ஜூன் 24 ஆம்திகதி கூடுவதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எடுத்த காரியங்கள் வெற்றிபெறும். பொருளா தாரம் போதுமான அளவிற்குக் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வு தேடிவரும். மேலதிகாரிகளின் ஆதரவோடு எதிர்பார்த்த சலுகைகளும் வந்து சேரும். விபரீத இராஜ யோகம் செயல்படும் இந்த நேரத்தில் திட்டமிடாது செய்த காரியங் களில் வெற்றி கிடைக்கும்.

பஞ்சமஸ்தானத்தில் சுக்ரன் ஜூன் 29 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். எனவே பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரும். உதிரி வருமானங்கள் பெருகும். பெண்வழிப் பிரச்சினை அகலும். வீடு, இடம் வாங்குவது பற்றி புதிய முடிவெடுப்பீர்கள். முக்கிய புள்ளிகள் உங்களுக்கு உதவ முன்வருவர்.

ஜூலை 2ஆம் திகதி ரிஷபத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். ஜூலை 10 ஆம் திகதி கடக ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார்.

**கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

இதன் விளைவாக பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். சகோதரர்கள் உங்கள் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பர். கடக புதனின் சஞ்சாரத்தால் வாழ்க்கைத் துணைவழியே உங்களை உதாசீனப்படுத்திய உறவினர் தேடி வரலாம். கடிதம் கனிந்த தகவலைக் கொண்டு வந்து சேர்க்கும். கடல் தாண்டிச் செல்லும் முயற்சிக்கு சுய ஜாதகம் அடிப்படையில் ஆராய்ந்து முடிவெடுப்பது நல்லது. அலைச்சல் கூடினாலும் ஆதாயம் சேரும். (தொடரும்)



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## 2009 விரோதி வருட மஹோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் விரோதி வருடம் ஆனி 09 ஆம் நாள் (23.06.2009) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் அம்பாளின் மஹோற்சவம் ஆரம்பமாகி 08.07.2009 புதன்கிழமை இரவு தெப்போற்சவத்துடன் நிறைவுறும். இலங்கையிற் கடல்சூழ்ந்த யாத்திரைத் தலமாகிய நயினையில் அழகொழுக வீற்றிருந்து அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் பெருவிழாக்காண வாரீர்... வாரீர்...

அழகொழுகும் திருக்கோலம் பாரீர்...பாரீர்...

| | | | | |
|---|---|---|---|---|
| 23.06.2009 | செவ்வாய்க்கிழமை | 01ஆம் திருவிழா | பகல் | கொடியேற்றம் (12.00 மணி) |
| 27.06.2009 | சனிக்கிழமை | 05ஆம் திருவிழா | இரவு | முத்துச்சப்பறம் |
| 29.06.2009 | திங்கட்கிழமை | 07ஆம் திருவிழா | இரவு | கைலைக்காட்சி |
| 01.07.2009 | புதன்கிழமை | 09ஆம் திருவிழா | பகல் | எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் |
| 02.07.2009 | வியாழக்கிழமை | 10ஆம் திருவிழா | பகல் | சிவபூசை கைலைக்காட்சி |
| | | 10ஆம் திருவிழா | இரவு | திருமஞ்சம் |
| 03.07.2009 | வெள்ளிக்கிழமை | 11ஆம் திருவிழா | பகல் | விசேட கருட -சர்ப்ப பூசை. |
| | | | | வாயு பட்சணி நாகம் வீதியுலா, இரவு பூந்தண்டிகை |
| 05.07.2009 | ஞாயிற்றுக்கிழமை | 13ஆம் திருவிழா | பகல் | கைலைக்காட்சி, இரவு சப்பறம் |
| 06.07.2009 | திங்கட்கிழமை | 14ஆம் திருவிழா | பகல் | தேர் 9.30 மணி |
| 07.07.2009 | செவ்வாய்க்கிழமை | 15ஆம் திருவிழா | காலை | தீர்த்தம் |
| | | 15ஆம் திருவிழா | இரவு | திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 08.07.2009 | புதன்கிழமை | 16ஆம் திருவிழா | இரவு | தெப்போற்சவம் (பூங்காவனம்) |

*குறிப்பு:* ஆலயத்தில் நடைபெறும் நித்திய அன்னதானப்பணி, அடியார்களின் பேராதரவுடன் அடியார் பணியாக ஆலய அறங்காவலர் சபையினரால் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள இறைபயணிகள் இல்லத்தில் நடைபெற்று வருகின்றது. இத்திருப்பணிக்கும் வேறு தனிப்பட்ட சபையினர், நிறுவனங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லையென்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

நயினாதீவு
09.05.2009
www.nainainagapooshani.com

அறங்காவலர் சபை
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(C-2600)

# இலங்கை அரசின் செயலுக்கு மனித உரிமை அமைப்புகள் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நெருக்கடியின் கடைசி வாரங்களில் இரு தரப்பினருமே இழைத்த மனித உரிமை அத்துமீறல்கள் பற்றி அனைத்துலக விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை எழுப்பியுள்ளன.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலிருந்து இயங்கிவரும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் அமைப்பின் அதிகாரி ஒருவர் இது குறித்து தெரிவிக்கையில்,

முன்னைய காலத்தில் இழைக்கப்பட்ட அத்துமீறல்களை விசாரித்து வந்த இலங்கை ஜனாதிபதி ஆணைக்குழு அண்மையில் கலைத்து ரத்து செய்யப்பட்டமை சட்டத்தை நிலைநாட்டுவதில் இலங்கை அரசுக்கு ஆர்வம் இருக்கிறதா என்பது பற்றி பல சந்தேகங்களை எழுப்பியிருப்பதாகத் தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை அரசின் மனித உரிமைகள் செயலாளர் ரஜீவ விஜேசிங்கே, நீதி வழங்கப்படல் எப்போதுமே மிகவும் துரிதமாகச் செய்யப்படக் கூடியது அல்ல. அதற்கு பொறுமை மிகவும் அவசியம் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையின் வடக்கே வவுனியாவில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் அடிப்படைத் தேவைகள் இன்னமும் அதிகளவில் பூர்த்தியாகாமல் இருப்பதாக அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-6)

# யாழ்-கொழும்பு இடையிலான விமானப் பாதையில் மாற்றம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான விமானப் பாதையில் ஏற்படுத்தப்பட்டிருந்த தடையைப் பாதுகாப்பு அமைச்சு தளர்த்தியுள்ளது. இதனால் உள்ளூர் விமானங்கள் யாழ்ப்பாணத்துக்கு நீண்டதூரம் சுற்றிச் செல்லும் நிலைமை தவிர்க்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்துக்கும், கொழும்புக்கும் இடையில் விமான சேவையில் ஈடுபட்டிருந்த உள்ளூர் விமானங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மேலாகப் பறப்பதைத் தவிர்த்து கொழும்பிலிருந்து புறப்பட்டு மன்னாரை அண்மித்த கடற்பரப்பின் மேலாகச் சென்று யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தன.

ஆனால் தற்போதுள்ள நிலையில் கொழும்பிலிருந்து இலகுவான வான்பாதை மூலம் யாழ்ப்பாணத்தை விமானங்கள் சென்றடையலாம் என சிவில் விமான சேவைகளின் பதில் பணிப்பாளர் பராக்கிரம திஸ்ஸா நாயக்க கூறினார்.

"பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் விமான சேவைகளில் ஈடுபடும் விமானங்கள் இதுவரை கடல் பகுதிகளுக்கு மேலாகவே சென்றன. எனினும், தரைப் பகுதிகளுக்கு மேலாகப் பறந்து செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு கடந்த புதன்கிழமை அனுமதியளித்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்த விமானப் பாதையை உள்ளூர் விமானங்கள் விரைவில் பயன்படுத்தும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த ஐந்து வருடங்களாக யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் விமான சேவைகள் நடைபெற்று வருகின்றபோதும், விமானம் பயணிக்கும் பாதைகளில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டிருப்பதால் குறைந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தைச் சென்றடையலாமென தனியார் விமான சேவையொன்றின் பணிப்பாளர் கூறினார். (ஓ-6)

# எதிர்காலத்தில் சிவில் பாதுகாப்பு படையினர் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுவர்

## ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் சிவில் பாதுகாப்புப் படையினர் நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுவர் என சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவின் பணிப்பாளர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

வெலி ஓயா 223 ஆவது சிவில் பாதுகாப்புப் படையின் தலைமையகத்தில் நடைபெற்ற புதிதாக பயிற்சியை முடித்துக் கொண்ட 254 சிவில் பாதுகாப்புப் படை வீரர்களின் இறுதி நாள் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிவில் பாதுகாப்புப் படைப்பிரிவின் பணிப்பாளர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

2002 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் சிவில் பாதுகாப்புப் படைப்பிரிவின் முக்கியத்துவம் குறைவடைந்தது. அதன்பின்னர் மீண்டும் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தத் தொடங்கியதும் எமது படைப் பிரிவின் முக்கியத்துவம் பலராலும் உணரப்பட்டது. இதனாலேயே 2006ஆம் ஆண்டு சிவில் பாதுகாப்புப் படை என்ற பெயரில் இப் படை தனிப்பிரிவாக உருவாக்கப்பட்டது.

19 ஆயிரத்து 260 ஆக இருந்த சிவில் பாதுகாப்புப் படையினரின் தொகை இன்று 41ஆயிரத்து 500 ஆக உயர்ந்துள்ளது. முன்பு போன்றல்லாது தற்போது சிறப்பான பயிற்சிகளும் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

சிவில் பாதுகாப்புப் படையின் ஒரு பிரிவான நந்திமித்திர படைப்பிரிவுக்கு விஷேட பயிற்சியும் வழங்கப்பட்டு வரப்படுகின்றது.

பயங்கரவாதிகளுடனான போராட்டங்களில் இப்படைப்பிரிவு உட்பட்ட சிவில் பாதுகாப்புப் படையினரின் பங்களிப்பு அளப்பரியது.

எதிர்காலத்தில் சிவில் பாதுகாப்பு படையினர் நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளிலும உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுவர் என்றார். (ஓ-6)

# குழந்தைகள் காப்பகத்திலிருந்து 2½ வயது குழந்தையை கடத்தி கொலை

## வென்னப்புவவில் சம்பவம்

குழந்தைகள் காப்பகத்தில் விடப்பட்ட இரண்டரை வயது ஆண் குழந்தை ஒன்று அங்கிருந்து கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று வென்னப்புவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

வென்னப்புவ பிரதேசத்தில் அமைந்துள்ள குழந்தைகள் காப்பகத்தில் பாதுகாப்பிற்காக விட்டுச் செல்லப்பட்ட பன்திலு பிரபாத் எனும் குழந்தையே கடந்த புதன்கிழமை மாலை இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது.

பிரஸ்தாப குழந்தையின் தாய் கடந்த புதன்கிழமை காலை இக்காப்பகத்தில் தன் குழந்தையை ஒப்படைத்துவிட்டு வேலைக்குச் சென்றுள்ளார். மாலை அங்கு வந்த தாய் குழந்தை காணாமல் போயுள்ளதை கேள்வியுற்று பதற்றமடைந்து வென்னப்புவ பொலிஸில் முறையிட்டுள்ளார்.

இந்த முறைப்பாட்டை அடுத்து நடத்தப்பட்ட தேடுதலின் போது குழந்தையின் சடலம் அப் பிரதேசத்திலுள்ள ஆற்றங்கரையில் நேற்று முன்தினம் காலை கரையொதுங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக வென்னப் புவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ள வென்னப்புவ பொலிஸார் குழந்தையின் தாயின் கள்ளக் காதல் என்று கூறப்படும் நபரொருவரை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-6)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற தென்மராட்சி கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு 13.06.2009


## மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்








## உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்






# அரசியலுக்கு வருவது குறித்து இன்னும் முடிபு எடுக்கவில்லை

## நடிகர் விஜய் பேட்டி

(சென்னை)

" நான், அரசியலுக்கு வருவது பற்றி ஆலோசனை நடத்தியது உண்மைதான். ஆனால் இன்னும் முடிபு எடுக்கவில்லை" என்று நடிகர் விஜய் கூறினார்.

நடிகர் விஜய் அரசியலுக்கு வரப்போவதாகவும், கட்சி தொடங்கப் போவதாகவும் சமீபகாலமாக தகவல்கள் பரவியது. இதுகுறித்த நிருபர்களின் கேள்விக்கு பதிலளித்த விஜய் தெரிவித்துள்ளதாவது,

"என் வளர்ச்சிக்கு மிகப் பெரிய காரணம், ரசிகர்கள்தான். அவர்கள் என்மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்கள். அதன் அடையாளமாக தமிழ்நாடு முழுவதும் 37 ஆயிரம் நற்பணி மன்றங்கள் உள்ளன. இந்த மன்றங்கள் சார்பில் ரசிகர்கள் நற்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களின் தகுதிக்கு மீறி, பொதுமக்களுக்கு பல உதவிகளை செய்து வருகிறார்கள்.

நற்பணி மன்றங்களை, அரசியல் அமைப்பாக மாற்றினால் தமிழ் நாட்டு மக்களுக்கு இன்னும் அதிக அளவில் உதவிகளை செய்யலாம் என்பது என் ரசிகர்களின் விருப்பம். இதை என்னிடம் பலமுறை சொல்லி வந்தார்கள். என் வளர்ச்சிக்குக் காரணமான ரசிகர்களுக்கும், அவர்களின் எதர்காலத்துக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நீண்ட காலமாக எனக்குள் திட்டம் இருந்தது.

அதேபோல் ஒவ்வொரு வீட்டிலும் என்னை மகனாகவும், அண்ணன்-தம்பியாகவும் நினைக்கும் தமிழ் நாட்டு பொது மக்களுக்கும் நிறைய நன்மைகள் செய்ய ஆசைப்பட்டேன். அதனால் அரசியலுக்கு வரவேண்டும் என்ற ரசிகர்களின் வேண்டுகோளில், எனக்கும் உடன்பாடு ஏற்பட்டது.

இது தொடர்பாக ரசிகர்களின் விருப்பத்தை மட்டுமல்லாமல், பொதுமக்களின் கருத்தையும் கேட்டு அறிய விரும்பினேன். இதற்காக சென்னையிலும், சில மாவட்ட தலைநகரங்களிலும் ஆலோசனை கூட்டங்கள் நடந்தன.



படித்த இளைஞர்கள், பெண்கள் எனப் பல பிரிவினரிடம் கருத்துக் களைக் கேட்டு, என் மூளையில் பதிவு செய்து அதற்கான தகுந்த நேரத்துக் காக காத் திருக்கிறேன்.

எடுத்தேன், கவிழ்த்தேன் என்று உடனடியாக அரசியலில் குதிப்பதிலும், கட்சி தொடங்குவதிலும் எனக்கு உடன்பாடு இல்லை. இவ்வாறு விஜய் கூறினார். (ஓ-6)

# அத்வானி - பிரதமர் பரஸ்பரம் மன்னிப்பு கோரல்

## பாரதீய ஜனதா வரவேற்பு

தேர்தல் பிரசாரத்தின் போது ஒருவர் மீது ஒருவர் காரசாரமான வார்த்தைகளை பரிமாறிக் கொண்டது தொடர்பாக நானும் அத்வானியும் ஒருவருக்கு ஒருவர் மன்னிபபுக் கேட்டுக் கொண்டோம் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். பிரதமரின் இந்தச் செயலை பாரதீய ஜனதாக்கட்சி வரவேற்றுள்ளது.

இதுதொடர்பாக பாரதீய ஜனதா துணை தலைவர் முக்தர் அப்பாஸ் நக்வி கடந்த புதன் கிழமை நிருபர்களிடம் பேசுகையில், பிரதமரிடம் அத்வானி மன்னிப்பு கேட்டதும் அத்வானியிடம் பிரதமர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதும் ஜனநாயகப் பண்பாட்டை வலுப்படுத்தும் செயலாகும் என்று பாராட்டுத் தெரிவித்தார். (ஓ-6)

# கச்சதீவில் கண்காணிப்பு கோபுரம் அமைக்கும் ஏற்பாடு

## சீன கடற்படை அதிகாரிகள் ஆலோசனை

(இராமநாதபுரம்)

கச்சதீவில் சீனக் கடற்படை அதிகாரிகள் ஆய்வுசெய்து வருவதால் தீவைச் சுற்றிலும் இலங்கை கடற்படையினர் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருவதாக தகவல் வந்துள்ளன.

இலங்கை வசம் தற்போது உள்ள கச்சதீவு மீட்பு கோஷம் தமிழகத்தில் வலுப்பெற்று வருகிறது. கச்சதீவை தக்கவைக்கும் நோக்கில் அங்கு கடற்படை முகாம் அமைக்க இலங்கை தயாராகி வருகிறது.

இதன் முதற்கட்டமாக கண்காணிப்பு கோபுரம் அமைக்கும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இலங்கையின் இந்தத் திடீர் முடிவுக்கு பின்னால் சீனா செயல்படுவதாக கருதப்பட்டது. அதன் ஆலோசனைப் படியே இலங்கை அரசு முகாம் அமைக்க முன்வந்ததாகத் தெரிகிறது. அதற்கான கட்டமைப்பு முறையும் சீனாவின் ஆலோசனைப் படியே நடக்க உள்ளது.

முதற்கட்ட பணிகள் ரகசியமாக நடந்து வரும் வேளையில் தமிழக மீனவர்களை நுழைய விடாமல் கச்சதீவுக்கு ஒரு கி.மீ முன்னரே இல்கைக் கடற்படையினர் விரட்டி அடித்து வருகின்றனர். இலங்கை கடற்படையின் வழக்கத்துக்கு மாறான இந்த செயல் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் சீன கடற்படை அதிகாரிகள் கச்சதீவுப்பகுதியில் கட்டுமானம் குறித்து ஆய்வு மற்றும் ஆலோசனை வழங்கி வருவதாக தற்போது தகவல்கள் வந்துள்ளன. இது இந்திய அரசுக்கு தெரியவந்தால் விபரீதம் ஏற்படும் என்பதால் கச்சதீவு சுற்றிலும் இலங்கைக் கடற்படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கச்சதீவில் இலங்கையை விட சீனா அதிக ஆர்வம்காட்டி வருவது பெரும் சந்தேகத்தை எழுப்பிவரும் நிலையில் இந்த விவகாரத்தில் இந்திய அரசு தொடர்ந்து மௌனம் காத்துவருவது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஓ-6)

# இலங்கையில் போரினால் இடிக்கப்பட்ட கோவில்களை மீள் நிர்மாணம் செய்யவேண்டும்

## ராம்சேனா வலியுறுத்தல்

(கோவை)

இலங்கையில் தொடர்ந்த யுத்த சூழ்நிலை காரணமாக தகர்க்கப்பட்ட இந்துக் கோயில்களை விரைவில் மீள் நிர்மாணம் செய்ய வேண்டும் என ராம்சேனா அமைப்பின் தலைவர் பிரமோத் முத்தாலிக் தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் போதிய நிவாரணம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படவில்லை. இதை இந்திய அரசு கவனத்தில் எடுத்து இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். போரின் போது பாதிப்பிற்குள்ளான இந்துக்கோவில்களை மீண்டும் புனர் நிர்மாணம் செய்து கொடுக்க வேண்டும். இல்லையேல் இந்துமக்கள் கட்சியுடன் சேர்ந்து போராட்டம் நடத்துவோம்.

கர்நாடக மாநிலம் மங்களூரை தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டுவரும் மாபியா கும்பல் மாணவ மாணவிகளை பாலியல் கொடுமைக்கும், மதுபோதைக்கும் ஆளாக்கி வருகிறது. நாங்கள் போராட்டம் நடத்தி 25 சதவீத குற்றச்செயல்களை தடுத்துள்ளோம். எங்களது போராட்டம் காரணமாக அரசு 72 விடுதிகளை மூடியுள்ளது. மாபியா கும்பலுக்கு எதிரான எங்களது போராட்டம் தொடரும் என்று தெரிவித்தார். (ஓ-6)

# இலங்கைக்கு திரும்ப விரும்பும் அகதிகளுக்கு இந்திய அரசு திடீர் நிபந்தனை விதிப்பு

(திண்டுக்கல்)


அகதிகள் முகாமில் தங்கியுள்ள இலங்கை செல்ல வேண்டுமானால் மீண்டும் வரமாட்டேன் என கியூபிரிவு பொலிஸாரிடம் உறுதியளிக்க வேண்டுமென அரசு நிபந்தனை விதித்துள்ளது.

இலங்கையில் 1983ல் ஏற்பட்ட இனக் கலவரத்திற்குப் பின் ஏராளமானோர் அகதிகளாக தமிழகம் வந்தனர். தமிழகத்தில் 117 முகாம்களில் தங்கியுள்ள இவர்கள் வெளி நபர்களுடன் தொடர்பு வைத்துள்ளனரா என்பது குறித்து கியூபிரிவு பொலிஸார் கண்காணித்து வருகின்றனர் இதில் முகாமில் தங்கியுள்ள அகதிகள் சிலர் இலங்கைக்கு செல்ல விரும்புகின்றனர் இவ்வாறு செல்ல விரும்புபவர்கள் கியூபிரிவு பொலிஸாரிடம் மீண்டும் முகாமிற்கு வரமாட்டேன் என்று உறுதி மொழி எழுதி கொடுத்து விட்டு சான்றிதழ் பெற்று அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஓ-6)

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 1947.08. 22

மறைவு 2004.06.15



அமரர் கந்தையா ஜெகசோதி

பூவுலகை விட்டகன்ற எம் குடும்ப ஜோதியே -நீங்கள்
பூவுலகில் வாழ்ந்த நாட்கள் அருமை அருமை
சீருடனே எமை காத்த தெய்வமே!
சென்று விட்டீர் எமை விட்டு ஏனோ? ஏனோ?
ஆண்டுகள் ஐந்து ஆனபோதும்
ஆறிடுமோ எம் துயரம்...

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (C-2652)

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளை

# தமிழர்களுக்கான நிவாரணப் பொருட்களுடன் தரித்து நிற்கும் கப்பலை இந்தியத் துறைமுகத்தில் பொருட்களை இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்

## தே.மு.தி.க தலைவர் விஜயகாந் வேண்டுகோள்

(சென்னை)

ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங் கைத் தமிழர்களுக்காக நிவாரணப் பொருட்களை ஏற்றிவந்த கப்பலை இலங்கை அரசு தடுத்து நிறுத்தியுள்ளது. அந்தக் கப்பலை இந்திய துறைமுகத்தில் அனுமதித்து, நிவாரணப் பொருட்களைப் பெற்று, செஞ்சிலுவைச் சங்கம் மூலமும் இலங்கைத் தமிழர்களுக்கு விநியோகிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தே.மு.தி.க, தலைவர் விஜயகாந்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இலங்கையில் மூன்று இலட்சத்துக்கும மேற்பட்ட தமிழர்கள் ஆடு, மாடுகளைப் போல் இலங்கை இராணுவக் காவலில் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை. தினந்தோறும் பட்டினியால் தமிழர்கள் இறந்து வருகின்றனர். மனிதாபிமான அடிப்படையில் இவர்களுக்கு உதவ, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள், தங்களால் இயன்ற உதவிப் பொருட்க்ளைச் சேர்த்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக, இலங்கை அரசிற்கு முன்கூட்டியே தகவல் தந்துள்ளனர். இந்த கப்பல் இலங்கையை நெருங்கிய போது, இலங்கைக் கடற்படையினரால் தடுத்து நிறுத்திவைக்கப்பட்டது. இந்த கப்பலில் உணவு, மருந்துப் பொருட்கள் தவிர வேறு எதுவும் இல்லை என சோதனையிட்ட பின் இலங்கை அரசு தெரிவித்தது.

இருப்பினும் சில ஆவணங்கள் சரி யில்லை என்று சொல்லி நிவாரணக் கப்பலுக்கு அனுமதி மறுத்துத் திருப்பி அனுப்பப் பட்டுள்ளது. உண்மையிலேயே தமிழ் மக்கள் மீது இலங்கை அரசிற்கு அக்கறை இருக்குமானால் இந்த உதவியை பயன்படுத்தி இருக்க வேண்டும்.

இந்தக் கப்பல் நடுக்கடலில் இன்னும் காத்துக்கொண்டிருக்கிறது. அது திரும்ப லண்டன் செல்ல வேண்டுமானால், இந்த உணவு மற்றும் மருந்துப் பொருட்களை கடலில் கொட்டி விட்டுத்தான் செல்ல வேண்டும். இலங்கை அரசின் இந்த



நடவடிக்கையால் உலகெங்கும் உள்ள மனிதாபிமானிகள் உதவி செய்யும் வாய்ப்பு, அறவே அற்றுப் போகும். நடுக்கடலில் நிற்கும் நிவா ரணக் கப்பலை இந்திய துறை முகத்திற்கு வரச் செய்து நிவாரணப் பொருட்களை இங்கு இறக்க தமிழக அரசு மத்திய அரசினை நிர்ப்பந்திக்க வேண்டும்.

அந்த பொருட்களை செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இலங்கை தமிழர்களுக்கு இந்திய தூதரின் மேற்பார்வையில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழர் பகுதிகளில் இருந்து இலங்கை இராணு வத்தை திரும்பப் பெறவும் தமிழர்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்ல வழிவகை செய்ய வேண்டுமென இலங்கை அரசை மத்திய அரசு வற்புறுத்த வேண்டும். இவ்வாறு விஜயகாந்த் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 9-I

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினது 16ஆவது ஆண்டு நிகழ்வுகளில் முதலாம் நாள் (10.06.2009) மாலை அமர்வில் பிரயோக விஞ்ஞான பிரிவின் தலைவர் என்ற நிலையில் அப்பிரிவின் தலைவர் உரையாக "இன்னொரு பசுமைப் புரட்சியை நோக்கிய பயணம்" Marching to wards another green revolution எனும் தலைப்பில் ஆற்றிய உரையின் சாராம்சத்துடன் இன்னொரு பசுமைப்புரட்சியின் படிகளை ஒவ்வொன்றாக பாலும் தெளி தேனும் பாகும் கலந்து சுவைத்து ஏறிப் பார்ப்போமா? வாருங்கள் வழி இனித் திறக்கும்.

நாம் பயணிக்கவிருக்கும் இன்னொரு பசுமைப்புரட்சியில் முதலில் நடந்தது என்ன? அதன் பயன்களென்னென்ன? இப்போது நாம் எங்கிருக்கிறோம்? பசுமைப் புரட்சி என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்கள் எவை? பசுமைப்புரட்சியிலிருந்து பரம்பரையலகுப் புரட்சியை Gene revolution நோக்கி? இதன் மூலம் உயிர் தொழில்நுட்பமும் (Biotechnology) சேதன விவசாயமும் எங்ஙனம் இணையும்? இவையனைத்தையும் ஒன்றிணைத்து என்றுமே பசுமையான புரட்சியாக (Ever green revolution) மாற்றுவது எப்படி? என்ற வினாக்களுடன் எங்களது வளத்திலிருந்து எங்களுக்குத் தேவையான பசுமையான தேசத்தை கட்டியெழுப்ப அனைவரும் இங்கிருந்து ஒன்றிணைவோம். வரலாற்றின் பங்குகளை ஒவ்வொன்றாகத் தட்டி அதில் நிகழ்ந்தவற்றை அராய்ந்து செல்வது சாலச் சிறந்தது.

**பஞ்சங்களுக்கு இவை உதாரணங்கள்**

பஞ்சம் பட்டினி என நாம் அடிக்கடி கேள்விப்பட்டதுண்டு. ஆயினும் 1840 களில் அயர்லாந்து நாட்டில் ஏற்பட்ட பஞ்சமோ விபரிக்க முடியாததாகும். பஞ்சமென்றால் பட்டினியென்றால் இதுவென துலாம்பாரமாக எடுத்துக் காட்டிய கொடூரமான பட்டினிச் சாவு அது. 2 அரை மில்லியன் மக்களை ஒரேயடியாக காவு கொண்ட பட்டினியது. அம் மக்களது அடிப்படையுணவுப் பயிரான உருளைக் கிழங்கில் "பைற்றொப்தீறா இன்பெஸ்ரன்சு"





என்னும் பூஞ்சன நோயின் தொற்றுக் காரணமாக ஏற்பட்ட பின் வெளிறல் நோய் அந்த அவலச் சாவிற்கு காரணமாகியது. இதுதான் அறியக்கிடைத்த முதல் பட்டினிச்சாவு. அதனைத் தொடர்ந்து இது போன்று பல உயிர்களைக் காவு கொண்ட நிகழ்வுகள் நடந்தன. அவையனைத்தும் கொடூர நிகழ்வுகளாகவே கணக்கிடப்பட்டன.

வங்கதேசத்தில் நிகழ்ந்த பட்டினிச்சாவும் மிகவும் கொடுமையானது. வங்கத்து மக்களின் அடிப்படை உணவான நெல்லில் ஏற்பட்ட மண்ணிறப் புள்ளி நோய் (Brown spot) அதற்கு காரணமான கெல்மின்தோஸ் போறியம் ஒறைசே (Helminthosporium Oryzae) என்னும் இன்னொரு பூஞ்சணம் ஆகும். இங்கே 3.0 மில்லியன் மக்கள் இறந்தார்கள். ஒரே விளைநிலத்தில் திரும்பத் திரும்ப ஒரே பயிரை விளைவித்ததன் காரணமாக பூஞ்சணம் பல்கிப்பெருகி எப்பவும் அந்தப் பயிரை விளைவித்தாலும் நோய் ஏற்படுமளவிற்கு விளைநிலத்தில், அம் மண்ணில் நோய்க்காரணி பூஞ்சணத்தின் வித்தி நிறைந்திருந்தது. இதனை நோயுற்ற மண் (Sick soil) என அழைப்பர். மண் நோயுற்றதால் மக்கள் வகை தொகையின்றி மடிந்தனர்.

உலக நியதிகளில் பட்டினிச் சாவும் ஒன்று போலும். இதனால் இம்மாதிரியான மனித இழப்புக்கள் அங்குமிங்குமாக தொடர்ந்த வண்ணமேஇருந்தன. உணவின்றி பட்டினியால் மக்கள் இறந்த இந்த கோர நிகழ்வுகள் இன்று மட்டும் வரலாறுகளாக ஆகிவிட்டாலும், இவற்றிலிருந்து உலகம் கற்றுக் கொள்ளத் தவறிவிட்டது. மீண்டும் மீண்டும் வெவ்வேறு நாடுகளில் நிகழ்ந்த நடப்புகளிலிருந்து அவற்றை கட்டியங் கூறுவதாக அமைந்து விட்டன.

இயற்கை அழிவுகளைவிட மனிதனின் செய்கையால் மனித சமூகத்திற்கு ஏற்பட்ட அழிவுகளே அதிகம். அதிலும் உண்ண உணவின்றி பட்டினியால் மக்கள் கூட்டங் கூட்டமாக அழிவுற்றனரே! ஒவ்வொரு விடயத்திலும் இயற்கையை அனுசரித்து வாழ்வதை விடுத்து இயற்கையைக் கூட கேள்விக் கூண்டில் ஏற்றி விவசாயஞ் செய்ததால் வந்த வினை இது. வினை விதைத்தவன் வினையறுக்கத்தானே வேண்டும்! விளையாட்டிற்குக் கூட இயற்கையுடன் விளையாடக் கூடாது. இயற்கை சீறிச் சினந்தால், மனமுடைந்து பொங்கி யெழுந்தால் அனர்த்தமாகி, அவல நிகழ்வுகளாகி விடும். சுனாமியின் தாக்கத்திலிருந்து மீள முடியாது தவித்திருந்த மக்களுக்கு நிஷா மேலும் தலையிடியாகி நிலை குலைய வைத்துவிட்டது. இரண்டிற்கும் பின்பு கொளுத்துகின்ற சுட்டெரிக்கும் வெய்யில்- சகிக்க முடியாது மரநிழல் தேடி ஓட வைக்கின்றது. மர நிழல் எங்கே? இருந்த விருட்சங்களையெல்லாம் வெட்டி விறகாக்கி, விற்று காசாக்கி,




கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

சொத்து சேர்க்கும் இங்கொரு கூட்டம் எது வந்தாலும் அதைக் குடித்து அரை ஞான மோன நிலையில் இருப்பதால் எதைப்பற்றியும் கவலைப் படுவதில்லை.

ஆனால், மரம் வளர்த்து மானுடம் காக்கும் வெள்ளையுள்ளங்களும் இங்கு எம்முடனிருப்பதால் மனம்கொஞ்சம் ஆறுதலடைகின்றது. செயற்பாட்டில் கண்ணும் கருத்துமாய் மரங்களை வளர்த்தெடுக்க என பலவிதமான மரக்கன்றுகளை, செடி கொடி களை உற்பத்தி செய்து பல்வேறு இடங்களுக்கு, பாடசாலைகளுக்கு, பொது நிறுவனங்களுக்கு என பகிர்ந்தளிக்கும் சமூக செயற்பாடு கொண்ட "நிழல்" நிறுவனத்தின் பணி போற்றுதற்குரியது. தன்னை அடையாளங்காட்டாது. நிழல் போல தொடரும் இவர் தம் ஆக்கத்திற்கும் ஊக்கத்திற்கும் இனியொரு பசுமைப்புரட்சியின் படி நிலைகளுள் நிரந்தர இடமொன்றிருக்கும். பல்லாண்டு வாழ்க நின்பணி. (தொடரும்)

# வீட்டுத் திண்மக்கழிவு முகாமைத்துவம் - ஒரு பார்வை

திண்மக்கழிவுகளின் ஒன்று சேர்க்கையால் (Accumulation) நாம் இன்று பல்வேறுபட்ட சமூக, பொருளாதார மற்றும் சூழல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றோம். எனவே திண்மக் கழிவுகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து எம்மையும் எம்மைச் சூழவுள்ள சூழலையும் பாதுகாப்பது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.



திண்மக் கழிவு பற்றிய பல்வேறு விடயங்கள் இங்கே முன்னிலைப்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றன.

**முதலாவதாக திண்மக்கழிவு என்றால் என்ன?**

ஒரு சூழல் தொகுதியில் பல்வேறுபட்ட செயற்பாடுகள் காரணமாக வெளியேற்றப் படும் பொருளாதாரப் பெறுமதியற்ற திரவமில்லாத கழிவுகள், திண்மக்கழிவுகள் (Solid wastes) எனப்படுகின்றன.

வீடுகள், வியாபார, வர்த்தக, கைத்தொழில் மற்றும் விவசாய நடவடிக்கைகளின் காரணமாக திண்மக் கழிவுகள் உருவாக்கப்படுகின்றன.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் உருவாகும் திண்மக் கழிவுகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் அவற்றிற்கு பெறுமதி அளிப்பதுடன் சூழலை சுகாதாரத்துடனும் பேண முடியும். நாம் இங்கு வீட்டுத் திண்மக்கழிவுகளை எவ்வாறு முகாமைத்துவம் செய்ய முடியும் என ஆராய்வோம்.

**வீட்டுத் திண்மக்கழிவு**

வீண்டுத் திண்மக்கழிவுகள் எனப்படுபவை, நாளாந்த வீட்டுப் பாவனை மூலம் உருவாக்கப்படும் பொருளாதாரப் பெறுமதியற்ற திண்மக்கழிவுகள் ஆகும். உதாரணமாக சமயலறைக் கழிவுகளான தேயிலைச் சக்கை, முட்டைக்கோது, மரக்கறிக் கழிவுகள் (Vegetable residues) பழங்களின் தோல் மற்றும், தேங்காய் வழிக்கழிவு (Coconut scrapings) ஆகியன வீட்டுத் திண்மக் கழிவுகளில் (House hold solid waste) உள்ளடங்கும்.

**வீட்டுத் திண்மக் கழிவுகளை எவ்வாறு வினைத்திறனான முறையில் முகாமைத்துவம் செய்யமுடியும்?**

வீட்டுக் கழிவுகள் உயர் வீதத்தில் சேதனப் பகுதியை (Organic fraction) கொண்டிருப்பதனால், இவற்றை சிறந்த முறையில் மிகவும் பயனுள்ள கூட்டுப் பசளையாக (Compost) உருவாக்க முடியும்.

**வீட்டுத் திண்மக் கழிவில் இருந்து கூட்டுப் பசளையை உருவாக்குதல்**

கூட்டுப் பசளை உருவாக்கல் (Compost making) என்பது சூழலுக்கு அமைவான ஒரு திண்மக்கழிவு முகாமைத்துவமாகும். வீட்டுக் கழிவுகள் அதிக அளவில் உக்கக் கூடிய (Decomposable) சேதனப் பகுதியை கொண்டிருப்பதால் இவை சிறந்த முறையில் கூட்டுப் பசளையாக மாற்றப்பட முடியும்.

**எவ்வாறு?**

நாளாந்த வீட்டுச் செயற்பாடுகள் மூலம் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை நாம் கழிவுச் சமிபாடாக்கியினுள் (waste digester) இடுவதன் மூலம் 30-35 நாட்களில் கூட்டுப் பசளையாக மாற்ற முடியும்.

**கழிவுச் சமிபாடாக்கி (Waste digester)**

கழிவுச் சமிபாடாக்கியை நாம் மிகவும் குறைந்த செலவில் இலகுவாக உருவாக்க முடியும். எமது வீட்டிலுள்ள சுமாரான கொள்ளளவுடைய பழைய பிளாஸ்ரிக் வாளியைப் பயன்படுத்தி இக்கழிவுச் சமிபாடாக்கியை நாம் உருவாக்க முடியும். இப்பிளாஸ்ரிக் வாளியின் நடுவே 5 செ.மீ விட்டமுடைய பி.வி.சி. (PVC) குழாயை செலுத்துவதன் மூலம் நாம் கழிவுகளை காற்றூட்ட முடியும். செலுத்தப்பட்ட பி.வி.சி. குழாயானது அதன் வெளிப்பரப்பில் சம அளவில் துளைகளைக் கொண்டிருக்கும். அத்துடன் இதன் அடியில் சிறிய துவாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் உக்கிய கழிவுகளை இலகுவாக வெளியேற்ற முடியும்.

**கழிவுச் சமிபாடாக்கியை கையாளுதல்**

கூட்டுப்பசளை உருவாக்கத்திற்கு தேவையான நீரும், காற்றோட்டமும் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். நாளாந்தம் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகள் சமிபாடாக்கியினுள் உரிய முறையில் படைகளாக (layers) இடப்படும். கழிவுகள் இடப்பட முன்னர் காய்ந்த மாட்டுச் சாணம் மற்றும் ஈரமான சாணகம் 3:1 என்ற விகிதத்தில் ஒரு சிறிய படையாக இடப்படும்.

இப்படையானது உக்கலை ஆரம்பிக்கும் நுண்ணங்கிகளின் வாழிடமாக விளங்கும். பின்னர் நாளுக்கு ஒரு தடவை இக்கழிவுகளுக்கு நீர் விசிறப்படும். நீரின் அளவானது இடப்பட்ட கழிவுகளுக்கு ஏற்ப வேறுபடும். உக்கிய கழிவுகள் சமிபாடாக்கியின் அடியில் இருந்து அகற்றப்படும். அதேவேளை புதிய திண்மக் கழிவுகள் சமிபாடாக்கியின் மேற்புறத்தேயிருந்து இடப்படும். இவ்வாறாக நாம் தொடர்ச்சியான முறையில் கூட்டுப் பசளையை வீட்டிலேயே தயாரிக்க முடியும்.

**கூட்டுப்பசளையும் வீட்டுத்தோட்டமும்**


தற்கால சூழ்நிலையில் வீட்டுத் தோட்டமானது இன்றியமையாததாகும். ஏனெனில் தற்போது விவசாய இரசாயனப் பொருட்கள் மிக அதிகளவில் தாராளமாக பயிர்ச் செய்கையில் பயன்படுத்தப்படுகின்றன. மிதமிஞ்சிய இப்பாவனை மூலமாக மனிதனுக்கு பல்வேறுபட்ட உடல் சுகாதார கேடுகள் ஏற்படுகின்றன.

விவசாயிகள் பூச்சிப் பீடைகளை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறுபட்ட விவசாய இரசாயன பீடைகொல்லிகளை பாவிக்கின்றனர். பொதுவாக ஒரு விவசாய இரசாயன பீடை



கொல்லியை பாவித்தால், 14 நாட்களின் பின்னரே அதனை அறுவடை செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் நச்சுத்தன்மை (Toxicity) காய்கறிகளின் மூலம் மனித உடலுக்கு கடத்தப்படும். சில பீடை கொல்லிகள் அமைப்பழிவிற்கு (Disintegration) உட்படுவதில்லை.

இவை Organochloride வகையைச் சார்ந்தவை இவை மனித உடலில் செறிவடையக் கூடியவை (Bio-magnification) இவ்வாறு செறிவடைவதால் பாரிய பக்க விளைவுகள் பிந்திய நாட்களில் மனிதனுக்கு ஏற்படுத்தி விடும்.



அத்துடன் பல்வேறு விவசாய இரசாயன பசளைகள் அதிக அளவில் பாவிக்கப்படுவதால் நிலத்தடி நீரில் (Underground water) நைத்திரேற்றின் செறிவு கூடி அதுவும் மாசடைகிறது. இவ்வாறு பாரிய பல்வேறு பின் விளைவுகளை நாம் எதிர்நோக்கும் போது, ஏன் சேதன விவசாயத்தை நோக்கி நகர்ந்து, நம்மை நாமே பாதுகாக்கக்கூடாது.

வீட்டுத் தோட்டத்தில் எமக்குத் தேவையான இலகுவாக பராமரிக்கக்கூடிய மரக்கறிப் பயிர்களையும் பயிரிடுவதன் மூலம் எமது உடல் நலத்தைப் பேணமுடியும். வெண்டி, கத்தரி, பாகல், புடோல், மற்றும் தக்காளி ஆகியன வீட்டுத் தோட்டத்தில் பயிரப்பட முடியும். பொதுவாக கத்தரிப்பயிரை பூச்சி பீடைகள் விட்டு வைப்பதில்லை.

ஆனால் இணுவிலில் யூனியன் கல்லூரி உப அதிபரான திரு. எஸ். சண்முகேஸ்வரன் வீட்டில் சேதனப்பசளை மூலமும் சில ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டு முறை மூலமும் வளர்க்கப்பட்ட கத்தரிப் பயிரானது மிகவும் வீரியமாக வளர்ந்து திருப்தியான விளைவையும் கொடுத்து வருகிறது.

எனவே தான் மேலே விவரிக்கப்பட்ட முறை மூலமாக திண்மக் கழிவுகளை கூட்டுப் பசளையாக மாற்றி வீட்டுத் தோட்டத்தை விருத்தி

ந. கண்ணன்
இறுதியாண்டு மாணவன்,
விவசாய இயந்திரவியல் துறை,
விவசாய பீடம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

செய்வது மிகவும் இன்றியமையாததாகும். வீட்டுக்கழிவில் இருந்து உருவாக்கப்படும் பசளை மூலம் நாம் பல நன்மைகளை பெற்றுக் கொள்வதுடன் எம் சூழலையும் நன்மையும் பாதுகாக்க முடியும் என்பது நிதர்சனமாகும்.

> கடும் காற்றில் கைவிளக்கை வைத்துக் கொண்டு காற்று அணைத்து விட்டது என்று சொல்வது அறியாமையாகும். அது போலவே எந்தவொரு முயற்சியும் செய்யாமலே இருந்து விட்டு விதி அவர்களை வீழ்த்தி விட்டது என்று சொல்வது அறிவின்மையே.
> ~ குமரகுருபரர்

# வலம்புரி

## மக்களின் மனக்கவலை குறித்தும் கவனம் செலுத்துவது கட்டாயம்

வடக்கின் வசந்தம் தொடர்பான விசேட செயலணிக்கூட்டம் நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் இடம் பெற்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், வடக்கின் வசந்தம் செயலணியின் தலைவருமான பசில் ராஜபக்ஷ தலைமையில் நடந்த விசேட கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள், வளப்பற்றாக்குறைகள், அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டன.

வடக்கின் பிரச்சினைகள் என்பது ஒரு கூட்டத்தில் முடிவு காணக்கூடியதல்ல.

இடம்பெயர்வு, முகாம்வாழ்க்கை, உயர்பாதுகாப்பு வலயம், மீளக்குடியமர்வு என்ற மிகப் பெரிய திமிங்கிலப் பிரச்சினைகள் வடபகுதி மக்கள் முன் எழுந்து நிற்கின்றது.

இறை பரம்பொருள் நேரில் வந்தால் கூட உடனடியாகத் தீர்க்க முடியாதெனக் கூறும் அளவிற்கு வடபகுதி மக்கள் யுத்தத்தால் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்துள்ளனர்.

அதேநேரம் வடக்கின் வசந்தம் வருகிறது. வாழ்வு மலரப் போகிறது என்ற மகிழ்வு மக்கள் மத்தியில் எந்தளவு தூரம் வியாபித்துள்ளது என ஆய்வு செய்தால், கிடைக்கின்ற முடிவு ஆச்சரியமாகவே அமையும்.

இதனை கூறுவதானது, வடக்கின் வசந்தத்தைப் புறக்கணிப்பதாகாது.

மாறாக, எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்களை அறிவிக்கும் வசந்தத்தை வரவேற்பதில் வட பகுதி மக்களின் மனங்கள் முனைப்படையாமைக்கு காரணம் அவர்கள் சந்தித்த உயிரிழப்பு-உறவுகளை இழந்த பரிதவிப்பு.

குடும்பம் குடும்பமாக பலியாகிப் போனதன் விளைவு. போதாக்குறைக்கு முகாம் வாழ்க்கை. இந்நிலையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் குறைந்தது ஒருகோடி ரூபாய் கொடுத்தாலும் ஐயா பணம் வேண்டாம். இறந்துபோன எங்கள் உறவைக் கொண்டு வந்து தாருங்கள் என்று தான் கேட்பார்கள்.

நிலைமை இதுவாக இருக்கும் போது 'வசந்தம்' பற்றிய சிந்தனை மகிழ்வைத் தருவது முடியாத காரியமே.

எனவே வடக்கின் வசந்தம் என்ற உச்சாடனத்துடன், முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை அவர்கள் விரும்பும் இடங்களுக்குச் செல்ல அனுமதிப்பதும் -பிரிந்த குடும்பங்களை -பிள்ளைகளை இணைப்பதும் அவசரமாகச் செய்யவேண்டிய மனிதநேய விடயங்கள் ஆகும்.

# இலங்கையில் இராணுவ ஆட்சிக்கு நிகரான ஏகாதிபத்திய ஆட்சியை ஏற்படுத்த முடியாது

## கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இராணுவ ஆட்சிக்கு நிகரான ஏகாதிபத்திய ஆட்சியை ஏற்படுத்தி அதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் நடைபெறுவதாகவும் தமிழர்களுக்கு சகல உரிமைகளும் வழங்குவதாக அரசாங்கம் உறுதிமொழி வழங்கியுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும், நடைமுறையில் இவ்வாறான உரிமை வழங்கலை காணக் கூடியதாக இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் கொலை செய்யப்பட்டதனை கொண்டாடும் அரசாங்கம் ஏன் அதிகாரப் பரவலாக்கல் குறித்து கவனம் செலுத்தத் தவறியுள்ளதென அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதிகாரப் பரவலாக்கல் திட்டங்களுக்கு ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பல இனவாத கட்சிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தமிழர் உரிமைகள் நியாயமான வகையில் வழங்கப்படும் என்பதற்கு எவ்வித உத்தரவாதத்தையும் அளிக்க முடியாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-6)

# மோதல்கள் முடிபுற்ற நிலையில் தமது செயற்பாடுகளை மாற்றியது சமாதான செயலகம்

## செயலகத்தின் செயலாளர் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான மோதல்கள் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில் தமது செயற்பாடுகளை மாற்றி அமைக்கப்போவதாக அரசாங்க சமாதான செயலகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ,

எமது செயற்பாடுகள் குறித்து நாம் மீள ஆராயவேண்டியுள்ளது. கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எமதுசெயற்பாடுகளை மாற்றி அமைக்கவுள்ளோம்.

தேர்தல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில்" அரசாங்க படைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பிரசாரங்களுக்கு எதிரான பிரசாரங்களில் சமாதானச் செயலகம் தொடர்ந்து ஈடுபடும் அதேநேரம் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் தாம் முக்கிய பங்காற்றவுள்ளோம்.

தமிழ்நெட் மற்றும் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் பணிகளில் எமது அதிகாரிகள் ஈடுபட்டு இருந்தனர். தற்பொழுது அவர்களின் பணி நிறைவடைந்துள்ளது. எனவே நாம் இடம்பெயர்ந்தவர்களின் விடயங்களில் கவனம் செலுத்தவுள்ளோம் என்றார் அவர்.

நாட்டை மீளக்கட்டியெழுப்பி இனங்களுக்கிடையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப சமாதானச் செயலகம் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் எனவும் ரஜீவ விஜயசிங்க மேலும் தெரிவித்தார். (ஓ-6)

## தேசிய மட்ட வேதாகம புதிர் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட வேதாகம புதிர் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியின் கனிஷ்ட பிரிவினர் முதலிடம் பெற்றனர். யாழ்.மாவட்ட வரலாற்றில் பாடசாலை மட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரியே முதன்முறையாக தேசிய மட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 45 வருடங்களாக நடைபெற்றுவரும் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி பலதடவைகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் மாணவிகள் எப்சிபா, கலைமகள், வசந்தினி, நிதுர்சினி ஆகியோர் போட்டியிட்டு வெற்றிபெற்றதுடன் இவர்களுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-27)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் கலை நிகழவுகளும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய மைதானத்தில் சீ.சுஜீபா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்விற்கு முதன்மை விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விமலநாதனும், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சந்திரதேவியும் கலந்து கொள்வர். (ஓ-36)

## பாதுகாப்பற்ற மதகினால் வாகன ஓட்டிகள் அச்சம்

(வடமராட்சி)

பருத்தித்துறை-சாவகச்சேரி பிரதான வீதியில் யாக்கரு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் மதகு ஒன்று பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதினால் இவ் வீதியூடாகச் செல்லும் வாகன ஓட்டிகள் அச்சமடைகின்றனர்.

அம் மதகின் இருபக்கங்களிலும் சீமெந்துக் கட்டுகள் எதுவுமில்லாமல் சமதரையாகக் காணப்படுகிறது. இதனால் வாகன ஓட்டிகள் எந்நேரமும் விபத்து ஏற்படலாமென அச்சமடைகின்றனர்.

இதேவேளை மந்திகை -வல்லிபுரம் வீதியிலுள்ள உபயகதிர்காமம் பகுதியில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாதிருந்த மதகு ஒன்று வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஏழு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-10)

## அரச உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில,சிங்கள வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தில் மாணவர்கள்,அரச உத்தியோகத்தர்களுக்கான ஆங்கிலம்,சிங்கள வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வகுப்புகளில் இணைந்து கற்க விரும்புவோர் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை நிலையத் தலைவரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ-36)

## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் தரம் 5 புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய இலங்கை வங்கியில் ரண் கெகுளு கணக்கு வைத்திருக்கும் 40 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வு 24ஆம் திகதி புதன்கிழமை மாலை 2 மணிக்கு இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரெட்ணம் தலைமையில் வடபிராந்திய இலங்கை வங்கி பணிமனையில் நடைபெறவுள்ளது. (ஓ)

## கோடி நன்மை தந்தருள்வாய்

(வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் ஆலய கொடியேற்றம் இன்று)

படியேறிக் கரங் கூப்பப்
பாலித்து அருள் தருவாய்
அடியளந்து அழுது வேண்ட
ஆவிதனைக் காத்தருள்வாய்
கடிதோடி வந்துன் பாதம்பணியக்
கார் மழையாய் மனம்குளிர்விப்பாய்
கொடியேறும் நாளின்று நாம் நாடக்
கோடி நன்மை தந்தருள்வாய் கண்ணலிங்கேசா.

சிவா - வட்டுக்கோட்டை.

## சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு

### நம்பிக்கை



உண்மையான நம்பிக்கை பற்றிய கருத்தை மீண்டும் நம்மிடம் உயிர்ப்பிக்க வேண்டும். நம்மிடமுள்ள நம்பிக்கையை மறுபடியும் விழித்தெழச் செய்ய வேண்டும்; அதன் பின்னர் நமது நாட்டினர் முன்பு நிற்கும் துயரங்கள் அனைத்தையும் நாமே மெல்ல மெல்லத் தீர்த்துவிடலாம்.

ஒரு சிறிது அதிகமாகப் பண்பட்ட மொழியை நீ பேசுவதால், வீதியில் திரியும் மனிதனை விட சிறந்தவனாக நீ உன்னைக் கருதுகின்றாய். அனைத்துக்கும் மேலாக கல்விப் பெருமை உன்னிடம் புகுந்த அன்றே நீ அழிந்தாய். இருக்கும் தளைகள் எல்லாவற்றிலும் மிகப் பயங்கரமானது அதுவே.

# 247 பயணிகளுடன் நடுவானத்தில்

# விமானம் பறக்கும்போது விமானி மரணம்

(நியூயோர்க்)

247 பயணிகளுடன் விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்த போது அதை இயக்கிய விமானி திடீரென்று மரணமடைந்தார். என்றாலும் துணை விமானிகள் விமானத்தைப் பத்திரமாக தரை இறக்கினார்கள்.

பெல்ஜியம் நாட்டின் பிரசல்ஸ் நகரில் இருந்து அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தில் உள்ள நெவார்க் நகருக்கு நேற்று முன்தினம் கண்டினென்டல் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் விமானம் ஒன்று சென்றுகொண்டிருந்தது.போயிங் ரகத்தைச் சேர்ந்த அந்த விமானத்தில் 247 பயணிகள் இருந்தனர்.

விமானம் 'அட்லாண்டிக் கடலுக்கு மேலே நடுவானில் பறந்துகொண்டு இருந்தபோது, அதை ஓட்டிச் சென்ற விமானி திடீரென்று மரணம் அடைந்தார்.

எனினும் விமானத்தில் அவருக்கு உதவியாக இருந்த மற்ற 2 துணை விமானிகளும் விமானத்தை ஓட்டிச்சென்று நெவார்க்லிபர்டி சர்வதேச விமான நிலயத்தில் பத்திரமாக தரை இறக்கினார்கள்.

இதனால் அதில் இருந்த 247 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள்.

விமானத்தில் மரணம் அடைந்த விமானிக்கு 61வயது ஆகிறது. நெவார்க் நகரத்தைச் சேர்ந்த இவர் விமானி தொழிலில் 20 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் பெற்றவர்.

அவர் இயற்கையாக மரணம் அடைந்ததாக காண்டினென்டல் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கெல்லி கிரிப் தெரிவித்தார்.

விமானம் தரை இறங்குவது வரை, அதில் இருந்த பயணிகளுக்கு விமானி மரணம் அடைந்தது தெரியாது.விமானத்தில் டாக்டர்கள் யாராவது இருந்தால் விமானியின் அறைக்கு வருமாறு விமானத்தில் அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து விமானத்தில் இருந்த டாக்டர்கள் சிலர் விமானியின் அறைக்குச் சென்றனர்.மற்றபடி , விமானி இறந்தது பற்றி பயணிகளுக்கு தகவல் எதுவும் தெரிவிக்கப் படவில்லை.

என்றாலும் விமானம்தரை இறங்கிய போது நெவார்க் விமான நிலையத்தில் அவசர கால பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ஓ-6)

# அழகு சாதனங்களின் ஒவ்வாமை ஏற்படுத்தும் விபரீத விளைவுகள்







அழகு சாதனங்களை மனம் போன போக்கில் உபயோகிப்பது எத்தனை அபாயகரமானது என்பதற்கு முன்னுதாரணமாக பிரித்தானிய பெண்ணான போலா பிரட் (38 வயது) மாறியுள்ளார்.

அவரால் பயன்படுத்தப்பட்ட கேச சாயத்தின் ஒவ்வாமைத் தன்மை ï V«ð | Vï , முகம் முழுவதும் வீங்கி மூச்சு விடவே சிரமமான நிலையை அவர் எதிர்கொண்டுள்ளார்.

மேற்படி கேச சாயத்தை அதில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க ஒவ்வாமை விளைவுகள் தொடர்பான பரிசோதனையொன்றை மேற்கொண்ட பின்னரே உபயோகித்ததாக போலா பிரட் தெரிவித்தார்.

அழகு சாதனங்களை உபயோகிக்கும் முன் அது தொடர்பான விளைவுகள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்கு தனக்கு ஏற்பட்ட பாதிப்பு படிப்பினையாகவுள்ளதாக அவர் கூறினார். (ஓ-6)

# ஈரான் தேர்தலில் முறைகேடு; அதிபரை எதிர்த்து எதிர்கட்சிகள் பேரணி



ஈரானில் சமீபத்தில் நடந்த அதிபர் தேர்தலில் அதிபர் முகமட் அகமட் நிஜாத் மீண்டும் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட மவுசாவி 30 சதவீதம் ஓட்டுக்கள் மட்டுமே பெற்று தோல்வி அடைந்தார்.

அதிபர் முகமட் அகமட் முறைகேடு செய்து தேர்தலில் வெற்றி பெற்று விட்டதாக எதிர்க்கட்சிகள் புகார் தெரிவித்தன.

எனவே அதிபரை எதிர்த்து ஒரு வாரமாக அங்கு தொடர் போராட்டம் நடந்துவருகிறது. கடந்த 13ஆம் திகதி எதிர்க்கட்சிகள் நடத்திய போராட்டத்தின் போது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதில் 8 பேர் கொல்லப்பட்டனர்.

இதை கண்டித்தும் அதிபரை எதிர்த்தும் டெக்ரான் நகரில் எதிர்க்கட்சிகள் பேரணி நடந்தது. இதில் ஒரு இலட்சம் பேர் கலந்துகொண்டனர். இந்தப் போராட்டத்தால் ஈரானில் பெரும் பதட்டம் நிலவியது. (ஓ-6)

# 49 வயது தென்கொரிய கோடீஸ்வரியை திருமணம் செய்வதற்கு 394 ஆண்கள் போட்டி

49வயதான தென்கொரிய கோடீஸ்வரியை திருமணம் செய்ய 394 ஆண்கள் விண்ணப்பித்து பர பரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.



இந்த கோடீஸ் வரியின் சொத்து மதிப்பு 18 மில்லியன் அமெரிக்க டொலராகும்.


இந் நிலையில் அவர் தனக்குப் பொருத்த மான மணமகன் ஒருவனைத் தேடி "சுனோ" என்ற இணையத் தளத்தில் கடந்த மே 20 ஆம் திகதி விளம்பரம் செய்திருந்தார்.

அழகிய, மெல்லிய பெண்மைத் தன்மையும் சுறுசுறுப்புமுள்ள 49 வயது கோடீஸ்வர பெண், தனக்குப் பொருத்தமான மணமகனைத் தேடுகிறார் என குபிப்பிட்டு செய்யப்பட்ட இந்த விளம்பரத்துக்கு 37 வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்ட மருத்துவர்கள், சட்டத்தரணிகள், கணக்கியலாளர்கள், வங்கி உத்தியோகத்தர்கள்,ஆசிரியர்கள்,அரசாங்க ஊழியர்கள், தனியார் நிறுவனப் பணியாளர்கள் உட்பட பலதரப் பட்ட தொழில்களைப் புரிவோரும் விண்ணபித்துள்ளனர்.

இந்த விண்ணப்பங்களில் 8 பேரின் விண்ணப்பங்களை மட்டும் தெரிவு செய்துள்ள மேற்படி பெண், அவற்றில் இரண்டு அல்லது மூன்று விண்ணப்பதாரிகளை நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தி தனக்குப் பொருத்தமான துணையைக் கண்டறிய திட்டமிட்டுள்ளதாக அவரின் பேச்சாளர் தெரிவித்தார்.

தன்னுடன் இணைந்து பயணங்களை மேற்கொள்ளவும் நேரத்தைச் செலவிடவும் கூடிய இதமான குணமுள்ள ஆண் ஒருவரையே கரம்பிடி க்க அவர் எதிர்பார்த்துள்ளதாக இந்தப் பேச்சாளர் குறிப்பிட்டார். (ஓ-6)

# சோமாலியாவில் தற்கொலை குண்டுத்தாக்குதல் பாதுகாப்பு அமைச்சர் உட்பட 10 பேர் பலி



சோமாலியாவின் தலைநகர் மொகாடிஷு வின் வடக்கே இடம்பெற்ற தற்கொலை கார்க்குண்டுத் தாக்குதலில் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஓமர் ஹாஷி அடன் பலியாகியுள்ளார். பெலெட்வெய்ன் எனும் இடத்திலுள்ள ஹோட்டலில் இடம்பெற்ற இக்குண்டுத் தாக் குதலில் அமைச்சர் உட்பட 10 பேர் பலியா கியுள்ளனர்.

அமைச்சரின் வாகனம் ஹோட்டலை விட்டு புறப்பட்டபோது, தற்கொலைக் குண்டுதாரி வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரை அங்கு செலுத்தி வந்து வெடிக்க வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வியாழக்கிழமை மொகாடிஷுவிலுள்ள பள்ளிவாசலொன் றில் இடம்பெற்ற மோட்டார் குண்டுத் தாக்குதலில் குறை ந்தது 13 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

அந் நகரை ஆக்கிரமித்துள்ள போராளிகளுக்கு எதிராக அரசாங்கப் படையினர் தொடர்ந்து போராடி வரு கின்ற நிலையில் இடம் பெற்ற இத்தாக்குதலுக்கு யார் காரணம் என கண்டறியப்படவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

கடந்த மாதம் முதற்கொண்டு சோமாலியா தலைநகரில் இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக 250 பேருக்கும் அதிகமானோர் பலியானார்கள். (ஓ-6)


## 45ஆம் நாள் ஆத்மசாந்தி நினைவுகூர்தல் பிரார்த்தனை



2009.06.21
ஞாயிற்றுக்கிழமை காலை
11.00 மணிக்கு எமது
இல்லத்தில் நடைபெறும்.
அன்னாரது மேற்படி
நிகழ்வில் உறவினர்கள்,
அயலவர்கள், நண்பர்கள்
அனைவரையும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

### திரு.நடேசன் சந்திரமோகன்

(முன்னாள் பணியாளர் பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்)

"ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி"
"ஓம் க்ரீம் ஸ்ரீம்புருஷோத்மயாய நம"

குடும்பத்தினர்
திருமதி ந.நவமணி (தாய்)
திரு.ந.நடேசன் (தந்தை) (ஓய்வுபெற்ற போதனாசிரியர்)
(முன்னாள் தலைவர்)
- திருவள்ளுவர் சனசமூக நிலையம்
- கிராம அபிவிருத்திச் சங்கம்
- சிக்கனக் கடன் உதவி வழங்கு கூட்டுறவுச் சங்கம்
- நாவலடி சக்தி அம்மன் தேவஸ்தானம்

தும்பளை தெற்கு, பருத்தித்துறை.
தொ.பே.இல: 077 2718747.


# அமெரிக்காவுக்கு வடகொரியா மிரட்டல்

(வாஷிங்டன்)

அணுகுண்டு தயாரித்து வரும் வட கொரியா, உலகத்துக்கே அச்சுறுத்தலாக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார்.

இதற்கு வடகொரியா கடும் எதிர்ப்பு தெரி வித்துள்ளது. எங்களது இறையாண்மைக்கு அமெரிக்காவோ, அதன் கூட்டாளிகளோ சிறிய பாதிப்பு ஏற்படுத்தினாலும், எங்கள் இராணுவம் அதைப்போல ஆயிரம் மடங்கு பதிலடி கொடுக்கும் என்று வட கொரியா தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, வடகொரியா அடுத்த மாதம் 4 ஆம் திகதியில் இருந்து 8 ஆம் திகதிக்குள் பொலிஸ்டிக் ரக ஏவுகணையை சோதித்துப் பார்க்கும் என்று ஜப்பானிய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஏவுகணை ஜப்பான் வழியாக ஹவாய் தீவு நோக்கிப் பாய்ந்து செல்லும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)


## நல்லூர் பிரதேச சபை உள்ளூராட்சி வாரம் -2009

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்டவர்களுக்கான பின்வரும் போட்டிகள் நடாத்தப்படவுள்ளது.

**01. சொல்வளம், குறுக்கெழுத்து, பொது அறிவுப் போட்டிகள் (பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்)**

1. கீழ்ப்பிரிவு :- **சொல்வளப் போட்டி** ஆண்டு:- 2,3,4 மாணவர்கள்
2. மத்தியபிரிவு:- **குறுக்கெழுத்துப் போட்டி** ஆண்டு:- 6,7,8 மாணவர்கள்
3. மேற்பிரிவு:- **பொது அறிவுப் போட்டி** ஆண்டு:- 9,10,11 மாணவர்கள்.

**02. மரதன் ஓட்டப்போட்டி (சகலருக்கும்)**

1. ஆண்களுக்கானது - 10km
2. பெண்களுக்கானது - 3km

எமது பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்துடன் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பங்கள் கிடைக்குமிடம் :** தலைமை அலுவலகம், நல்லூர் / கொக்குவில் உப அலுவலகங்கள் (அலுவலக நேரத்தில் மட்டும்).

**விண்ணப்ப முடிவுத் திகதி :**30.06.2009



மே.சாந்தசீலன் ,
செயலாளர் ,
நல்லூர் பிரதேச சபை.

(C-2653)





காரைநகர் கலாநிதி ஆர்.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடை பெற்ற விசேட மாநாட்டில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் வசந்தம் செயலணிக் குழுவின் தலைவருமான பசில் ராஜபக்ஷ மற்றும் பிரமுகர்களையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.


காரைநகர் கடற் பகுதியில் கடல் எல்லைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உட்பட்டவர்கள் ஆராய்வதையும் சுன்னாகத்தில் நோதேர்ன் பவர் நிலையத்தை திறந்து வைப்பதற்காக சென்ற மின்சக்தி அமைச்சர் ஜோன் செனவிரட்ணவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவேற்பதையும் அரச அதிபர் க.கணேஷ் உட்ப ...முகர்கள் மின் நிலையத்தை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# முல்லைத்தீவுக்கு நேற்று இராணுவத்தளபதி விஜயம்

(கொழும்பு)

எமது இராணுவத்தினர் நாட்டில் புரையோடிப் போயிருந்த பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்ததன் மூலம் தாங்கள் உலக நாடுகளில் உள்ள மிகச் சிறந்த இராணுவ வீரர்களென்பதை நிரூபித்துள்ளனர் என இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவுக்கு நேற்றுகாலை விஜயம் மேற்கொண்டிருந்த இராணுவத்தளபதி அங்கு உரை நிகழ்த்தும் போதே இவ்வாறு கூறினார்.

எமது இராணுவ வீரர்களின் தார்மீக உணர்வு உச்ச கட்டத் தில் காணப்படுகின்றது.

உலக நாடுகளில் உள்ள ஒழுங்காற்றல் மிக்க இராணுவங்களுள் ஒன்றாக இலங்கை இராணுவமும் கருதப்படுகிறது என அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# வன்னியில் எடுத்த ஆயுதங்களுடன் இராணுவ லெப்டினன்ட் கைது

(கொழும்பு)

வன்னியில் இருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் ரி-56 ரக ஆயுதம் ஒன்று உட்பட பல பொருட்களுடன் வான் ஒன்றில் சென்று கொண்டிருந்த இராணுவ லெப்டினன்ட் ஒருவர் உட்பட மூவர் ஹபரணை எரலிய ஓயா பகுதியில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட மற்றைய இருவரில் ஒருவர் பொலிஸைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து மற்றொரு முஸ்லிம் வர்த்தகரும் கைது செய்யப்பட்டிருக் கின்றார். அவரது தகவலைத் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள வானின் அதே இலக்கத்தைப்பயன்படுத்தி சேவையில் ஈடுபட்டுவந்த மற்றொரு வானத்தையும்பொலிஸார்கைப்பற்றிஉள்ளனர்.

அத்துடன் ஜி.எஸ்.பி. தொலைத் தொடர்பு சாதனம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-5)

# 24 மணி நேரமும் மீன் பிடியில் ஈடுபட...

யாழ். குடாநாட்டில் கடற்தொழிலில் தளர்வு தொடர்பாக நேற்று காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டிலேயே அவர் இதனை அறிவித்தார்.

இம் மாநாட்டில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,மின்சக்தி அமைச்சர் ஜோன் செனவிரட்ன,நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச,மீன்பிடி மற்றும் நீரியல்வள பிரதி அமைச்சர் பெர்ணான்டோ,மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சின் செயலாளர் பியசேன,மீன்பிடி நீரியல்வள திணைக்கள பணிப்பாளர் நாயகம் பத்திரன மற்றும் யாழ். அரச அதிபர் க.கணேஷ்,யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சமரசிங்க, கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கர்ணாகொட,

பிரதேச செயலாளர்கள், மீன்பிடி நீரியல்வள திணைக்கள யாழ். உதவிப்பணிப்பாளர் கே.தர்மலிங்கம், கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனப் பொதுமுகாமையாளர் இ.இராஜாராம்,யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சகலகடற் தொழிலாளர் சமாசங்களைச் சேர்ந்த ஆயிரம் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் கடற்தொழிலாளர் சமாசங்களின் பிரதிநிதிகள் தொழிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறினர்.

**மீனவர்களின் கோரிக்கைகள்**

அத்துடன் கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத்தினால் 17 அம்சக் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

✹ 24 மணி நேர கட்டுப்பாடற்ற வகையில் கடலில் மீன் பிடித்தல்.

✹ 25 குதிரை வலுவுடைய படகுகளை மீனவர்கள் பயன்படுத்துதல்.

✹ 3.5 மெற்றிக் தொன் அளவுடைய படகுகளின் பயன்பாடு.

✹ தினசரி கடற்தொழிலில் ஈடுபடல்

✹ கடற்தொழிலாளர் கடற்கரையில் தங்குமிட வசதி.

✹ கரையோரங்களில் வெளிச்ச வீடும், இடி தாங்கியும் அமைத்தல்.

✹ வள்ளங்கள் அணைப்பதற்கான துறைகளை அமைத்தல்.

✹ பனிக்கட்டி உற்பத்திக்கான வசதிகள்.

✹ கடலுணவு பதனிடுதல் தொழிற் சாலைகள்.

✹ ஏ-9 பாதையூடாக மீன் வகைகளைச் கொண்டுசெல்ல அனுமதி.

✹ கடற்கரையோர வீதிகள் திருத்தப்படல்.

✹ பெரிய துறைகளில் படகுகளை அணைப்பதற்கான வசதி.

✹ பாலைதீவு,இரணைதீவு,கற்கடதீவு போன்ற இடங்களில் தங்கியிருந்து தொழில் செய்வதற்கான வசதி.

✹ சிறுத்தீவில் மீன் பதனிடும் சந்தை.

✹ குடாக் கடலை ஆழமாக்குதல்.

✹ பண்ணை பாலாற்றில் பாலம் அமைத்தல்.

✹ மானிய அடிப்படையில் மீனவர்களுக்கு வள்ளம் வழங்கல்.

✹ மீன் தூள்,கோழித்தீன் உற்பத்தி தொழிற் சாலைகளை மண்டைதீவு மற்றும் பருத்தித்துறையில் மீண்டும் ஆரம்பித்தல் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

**பசில் எம்.பியின் அறிவிப்பு**

இதனை ஏற்றுக் கொண்ட வடக்கின் வசந்தம் செயலணித்தலைவர் பசில் எம்.பி. கடற்படையினரின் ஆலோசனையின் பின்னர் சில நிபந்தனைகளுடனான மீன் பிடி தளர்வு குறித்து இவ்வாறு அறிவித்தார்.

✹ 24 மணி நேரமும் மீன் பிடியில் ஈடுபடலாம்.

✹ வாரத்தில் 7 நாட்களும் தொழிலில் ஈடுபடலாம்.

✹ இரவு நேரங்களில் கடற் தொழிலில் ஈடுபடும் போது மாலை கடலில் வெளிச்சம் உள்ள போதே இறங்கி மறுநாள் காலை வெளிச்சம் வந்த பின்பே கரையில் ஏற வேண்டும்.

✹ தொழிலுக்குச் செல்லும் போது இறங்கும் துறை ஊடாகவே மீண்டும் கரையேற வேண்டும்.

✹ இதுவரை நடைமுறையில் இருந்தது போன்று கடற்படை முகாமில் பாஸ் கொடுத்து விட்டே தொழிலில் ஈடுபட வேண்டும்.

✹ இரவு வேளைகளில் கட்டுமரங்கள் பயன்படுத்த முடியாது.

✹ 15 குதிரை வலுவுடைய இயந்திரப் படகுகளையே பயன்படுத்தமுடியும்.

எதிர்காலத்தில் 25 குதிரை வலுவுடைய இயந்திர படகுகளை பயன்படுத்துவது ஆலோசிக்கப்படும்.

✹ இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்ட இறங்குதுறைகளுக்கூடாகவே தொழிலுக்குச் செல்ல முடியும் எனினும் பலாலி விமான நிலையப் பகுதியில் விமானம் வந்து செல்லும் பாதையில் மீன் பிடிப்பதற்கு அனுமதியில்லை.

✹ பண்ணை பாலத்தின் ஊடாக மீன்பிடி படகுகளில் சென்று தொழிலில் ஈடுபடலாம்.

✹ பண்ணை வீதியில் இன்னுமொரு பாலம் அமைத்துத் தரப்பட்டு மீனவர்கள் கடந்து செல்ல வசதி செய்து தரப்படும்.

✹ மானிய அடிப்படையில் படகுகள் இல்லாத மீனவர்களுக்கு படகுகள் வழங்கப்படும்.

✹ 3.5 மெற்றிக் தொன் படகுகள் பெற்றுத் தரப் படும்.

✹ பாதுகாப்புப் படையினரின் ஆலோசனைக்கு அமைய மீன் வகைகள் தென்னிலங்கையில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

✹ பனிக்கட்டி வசதியுடைய வாகனங்கள் பெற்றுத்தரப்படும்.

✹ இலங்கை கடல் எல்லையைத்தாண்டி மீன்பிடித் தொழிலில் ஈடுபடக்கூடாது.

போன்ற சலுகைகளையும் நிபந்தனைகளையும் பசில் எம்.பி. அறிவித்தார்.

இதேவேளை 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11ஆம் திகதிக்கு பின்னர் இருந்துவந்த கடு மையான கடற்தொழிலுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5,14,246)

# ஜனாதிபதியை...

வாழைச்சேனையில் வைத்து கடந்த 17ஆம் திகதி மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைதான தமிழர்கள் தற்போது பொரளை பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

# பொருள் போக்குவரத்தில் தாமதம்; மேலதிக செலவு மக்கள் மீது திரும்பும்!

## வர்த்தகர்கள் சுட்டிக்காட்டு

ஏ-9 வீதியூடாக யாழ். குடாநாட்டிக்கு கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் பொருட்கள் அநுராதபுரத்தில் பாதுகாப்பு சோதனைக்காக நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்படுவதால் ஏற்படும் போக்குவரத்து செலவு உட்பட்ட செலவுகளை மக்கள்மீதே திணிக்கப்பட வேண்டிய சூழல் ஏற்படும் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் எதிர்பார்த்ததை விட பொருட்களின் விலையினை அதிகரித்தே விற்க வேண்டி ஏற்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இந் நிலைமையின் காரணமாக பழவகைகள், கிழங்கு வெங்காயம் போன்ற பொருட்களை எடுத்து வர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

இதே வேளை இவ்வாறு அநுராதபுரத்தில் ஏற்படும் கால தாமதம் தொடர்பாக அரசினால் தமக்கு விளக்கம் எதும் தரப்படவில்லை என ஏ.எம்.ரி போக்குவரத்து நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார். தற்போது யாழ்ப்பாணத்துக்கு பொருட்களினை அனுப்பும் லொறிகளின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுவதாக தெரிவித்த அவர், ஒரு நாளைக்கு சுமார் இருநூறு வரையான லொறிகள் செல்ல வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இவ்வாறு ஏ-9 ஊடாக யாழ்ப்பாணத்திற்கு பொருட்கள் கொண்டு வரப்படும் என அரசு அறிவித்த நிலையில் இது வரையில் யாழ்ப்பாணத்துக்கு பொருட்களை கொண்டு சென்ற கப்பல்கள் வேறு நாடுகளில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராகி விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இச் சூழ்நிலையில் ஏ-9 ஊடாக பொருட்கள் யாழ்ப்பாணம் கொண்டு வரப்படுவதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் குடா நாட்டில் பொருட்களின் விலை உயர்வடையலாம் எனவும் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14)

# மத்யூஸ், முரளிதரன் அபாரம்; இறுதிப் போட்டியில் இலங்கை

டில்சானின் அதிரடியிலும் மத்யூஸ், முரளியின் மிரட்டலின் மூலமும் இலங்கை அணி 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

ஐ.சி.சி. 2-வது இருபது -20 உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் இலங்கை-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி டில்சானின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களை குவித்தது.

இதில் திலகரட்ண டில்சான் 57 பந்துகளில் (12 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 96 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்ததுடன் ஜெயசூர்யா 24, மத்யூஸ் ஆட்டமிழக்காமல் 12, சாமரசில்வா 11 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் பிராவோ 2 விக்கெட்டுக்களையும் ரெய்லர், பென் மற்றும் பொலாட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 159 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி மத்யூஸ், முரளியின் துல்லியமான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 17.4 ஓவர்களில் 101 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் அணித்தலைவர் கிறிஸ் ஹையில் ஆட்டமிழக்காமல் 50 பந்துகளில் (8 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் உட்பட) 63 ஓட்டங்களை எடுத்ததுடன் ஏனையோர் இரட்டை இலக்கைச் சேர்க்கமுடியாமலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

பந்து வீச்சில் அஞ்சலோ மத்யூஸ் 4 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் முரளிதரன் 4 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், மெண்டிஸ் 4 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், உதான, மலிங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறி நாளை பாகிஸ்தான் அணியை சந்திக்கிறது. (5)

# கடற்றொழிலாளர்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

புதிய நடைமுறையின் பிரகாரம் இன்று அதிகாலை மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபடமுடியுமென குருநகர் கடற்தொழிலாளர் சங்கம் நேற்று மாலை ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் அதிகாலை 3மணி முதல் மாலை 6மணி வரை கடற்தொழிலாளர்கள் கடலிற்கு செல்ல முடியும் எனவும் மாலை 6 மணிக்கு முன் கரைதிரும்பாத மீனவர்கள் மறுநாள் அதிகாலை கரைதிரும்ப முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரவு மீன்பிடிக்காகச் செல்லும் தொழிலாளர்கள் கரைப்பகுதியில் படையினர் இருக்கும் இடங்களில் இருந்து 500 யார் தூரத்திற்கப்பால் தொழிலில் ஈடுபடுமாறும் வெளியிணைப்பு இயந்திரம் பொருத்திய பிளாஸ்ரிக் படகுகள் அல்லது வள்ளங்களில் இரண்டு வெளிச்சம் (லோமியர்) தெரியும் வகையில் வெளிச்ச சமிக்கைகளை அமைக்க வேண்டும் எனவும் அது அறிவித்துள்ளது. (ச-39,14)

## ஜனாதிபதியின் பதவிக்...

செய்யப்பட்டிருந்த பேரணி தொடர்பாக கருத்துக் கேட்டபோதே ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அளுவிகார இதனைத் தெரிவித்தார்.

தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவிக்காலத்தை மேலும் 6 வருட காலத்திற்கு நீடிக்க வேண்டும் எனக் கோரி தம்புள்ளையில் அண்மையில் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை தமது நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு முற்பட்டுள்ளவர்களே இவ்வாறான சட்டவிரோதமான பேரணிகளை நடத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்தப் போரை திறம்பட நடத்தியமைக்காக அரச தலைவரை தாம் மதிப்பதாக தெரிவித்திருக்கும் ரஞ்சித் அளுவிகார, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் பொது மக்கள் கருத்துக் கணிப்பின் மூலமான ஆதரவையும் பெற்றுக் கொண்டால் மட்டுமே தேர்தலை ஒத்திவைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவிக்கான அடுத்த தேர்தல் 2011 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கின்றது. இத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் அனைத்து இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு திட்டமிட்டுள்ள நிலையிலேயே ஐ.தே.க. தரப்பிலிருந்து இவ்வாறான கருத்து வெளிவந்திருக்கின்றது. (ச-5)

## தமிழர் பிரச்சினையை...

80 ஆயிரம் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு நேரில் சென்றேன். அங்குள்ள நிலைமைகள் மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது.

தமிழர்கள் அனைவரும் அவர்களது வீடுகளில் குடியேற அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களுடன் சமாதானம் ஏற்படுத்தி இணக்கமாக செயல்பட வேண்டும். அவர்களை நோக்கி இலங்கை அரசின் கைகள் நீள வேண்டும்.

மனித உரிமை மீறல் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று எனது இலங்கை பயணத்தின் போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் கூறப்பட்டு இருந்தது. அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும். இந்த பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு காணாவிட்டால் இலங்கையில் மேலும் வன்முறை வெடிக்கும்.

இலங்கை மக்கள் உட்பட மனித உரிமை மீறல் குற்றங்களால் பாதிக்கப்படும் அனைத்து மக்களுக்காகவும் நான் தொடர்ந்து பாடுபடுவேன் என்றார். (ச-5)

## காங்கேசன்...

தெரிவிக்கையில்,

யாழ் -கொழும்பு புகையிரத சேவையை ஆரம்பிப்பதற்காக தாண்டிக்குளத்திலிருந்து காங்கேசன்துறை வரை புகையிரதப் பாதை அமைக்கப்படவுள்ளது.

இதில் முதற்கட்டமாக காங்கேசன்துறை முதல் பளை வரையான 56 கிலோமீற்றர் புகையிரதப் பாதை முன்பிருந்த வழியில் அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்டவுடன் யாழ். குடாநாட்டிற்குள் காங்கேசன்துறை முதல் பளை வரை உள்ளக புகையிரத சேவை நடத்தப்படும். பின்னர் தாண்டிக்குளத்திலிருந்து ஆரம்பமாகும் புகையிரதப் பாதை அமைப்பு வேலைகள் பளை வரை வந்து முடிந்த[illegible] யாழ்-கொழும்பு புகையிரத சேவை ஆரம்பிக்கப்படுமென பசில் எம்.பி.குறிப்பிட்டார். (ச-5)

## உயர் பாதுகாப்பு...

பிரதேசங்களில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட பின்னர் படையினருடன் ஆலோசித்து மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவர்.

இதன் மூலம் யாழ்.மாவட்டத்திற்குள் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது சொந்த இடங்களிற்கு சென்று விவசாயம், மீன்பிடி உட்பட வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (ச-5)

## மேலும் ஒருவருக்கு...

தொற்றுக்கு இலக்கானதாக சந்தேகிக்கப்படும் நோயாளர் ஒருவர் களுபோவில வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்கு நேற்றுக் காலை வருகை தந்த போது அவரை ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்பியதாக களுபோவில போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் லயனல் மொஹந்தரம்கே குறிப்பிட்டார்.

இந்தப் பெண் நோயாளர் இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட நோயாளர்கள் வருகைதந்த விமானத்தின் மூலமே சிங்கப் பூரிலிருந்து வருகை தந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்தப் பெண் நோயாளர் ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

நோவல் இன்புளுவன்சா எனப்படும் ஏ.எச் 1 என் 1 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களை அடையாளம் காண்பதற்காக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள ஸ்கானர் இயந்திரம் செயலிழந்துள்ளதாக, அரசாங்க வைத்திய அதிகாரிகளின் சங்கம் தவறான பிரசாரத்தை முன்னெடுப்பதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரி விக்கின்றார். இக்கூற்று தொடர்பாக, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்து வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ச-14)

## வடக்கு கிழக்...

முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் குறித்த பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் சுமார் 21 புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கில் புதிய இராணுவ முகாம்களையோ அல்லது பொலிஸ் நிலையங்களையோ அமைக்க வேண்டாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் அரசாங்கம் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தவிர படை வீரர்களின் எண்ணிக்கையை மேலும் 3 இலட்சத்தால் அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த இணையத்தள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## 24 மணிநேர...

சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மின்வலுத் துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ண மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து மின் பிறப்பாக்கியின் செயற்பாட்டை வைபவரீதியாக ஆரம்பித்தனர்.

அத்துடன் யாழ். குடாநாட்டிற்கு தடையின்றி 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதையும் உறுதி செய்யுமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர். (ச-5)


**நயினை நாகபூசணி அம்மன் பாமாலை**



நயினாதீவு நாகபூசணி அம்மன்
மகோற்சவத்தை ஒட்டி "வலம்புரி"
வருடம் தோறும் வெளியிடும்
"நயினை நாகபூசணி அம்மன் பாமாலை"
பகுதிக்கு கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.
உங்கள் கவிதைகளை
நயினை நாகபூசணி அம்மன் பாமாலை
"வலம்புரி"
இல.3, இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

குறிப்பு:- கவிதைகள் எட்டு(8) வரிகளுக்கு மேற்படாமல் அமைவது சிறப்பானது.



**தமிழர் விடுதலைக் கூட்டணி**
**TAMIL UNITED LIBERATION FRONT**
**2009-ம் ஆண்டு**
**யாழ்.மாநகரசபை தேர்தலுக்கான வேட்பாளர் விண்ணப்பம் கோரல்**

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட விரும்பும் எமது கட்சியின் ஆதரவாளர்கள், தொண்டர்கள் ஆண், பெண் இருபாலாரும் தங்களின் சுயவிபரக் கோவையுடன் எமது யாழ்.மாவட்ட தலைமைச் செயலகத்திற்கு 22-06-2009 மாலை 4.00 மணிக்கு முன்னர் நேரில் சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

57/48, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

இரா.சங்கையா
தலைவர் வீ.ஆனந்தசங்கரியின்
செயலாளர்

(C-2601)



**படிவங்கள் விற்பனையாகிறது**

1. புகையிரத திணைக்கள உதவிப் பாதுகாப்பு அத்தியட்சகர்.
2. தேசிய சமூக அபிவிருத்தி சமூகப்பணி டிப்ளோமா.
3. விவசாயக் கல்லூரி டிப்ளோமா.
4. விவசாய ஆராய்ச்சி உதவியாளர்
5. அஞ்சல்/உப அஞ்சல் சிற்றூழியர்.
6. குடும்பநல உத்தியோகத்தர்.
7. G.C.E. (O/L) - 2009

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 6693,2422,4374.

(C-2654)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.